# குருமுகம்

செல்வி தா. சியாமளாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# குருமுகம்

செல்வி. தா. சியாமளாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| நூற்தலைப்பு | : | குருமுகம் |
| முதற்பதிப்பு | : | மார்கழி 1990 |
| இரண்டாம் பதிப்பு | : | 2021 |
| பிரதிகள் | : | 200 |
| ஆக்கியோன் | : | செல்வி தா. சியாமளாதேவி |
| உரிமை | : | சிவயோக சமாஜம் |
| வெளியீடு | : | சிவயோக சமாஜம்<br>68, பிரதான வீதி,<br>திருகோணமலை.<br>தொ.பே.இல : 026 - 2222049 |

இலவச வெளியீடு

| | | |
|---|---|---|
| அச்சிட்டோர் | : | எஸ் எஸ் டிஜிட்டல்ஸ் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


1. ஆத்மாவில் நிலைத்த சிட்டுக்குருவி
2. சமசித்த பாவனை
3. சுபாவ மாற்றம்
4. செயலில் சிரத்தை
5. உலகின் யதார்த்த நிலை
6. கர்ம கௌசலயோகம்
7. வாழ்வின் போராட்டம்
8. சம பாவனை
9. உழைப்பின் பலன் அவனருளே
10. ஆத்ம சாதகனுக்கு நினைத்தது கைகூடும்
11. இதுவே தொண்டு
12. அச்சம் தவிர்
13. எல்லாமே கடந்து போகும்
14. எறும்புக்கும் இரங்கிடும் இதயம்
15. தியாகத்தின் வடிவம் குரு
16. மேலைநாட்டு பக்தன்
17. கருணைத் தெய்வம்
18. கதிர்காமம் கண்ட அற்புதம்
19. ஓடிடும் மனிதா; நீ தேடுவது என்ன?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முன்னுரை

வானொலியில் சில சமயங்களில் திருவிழாக்களின் நேர்முக வர்ணனை கேட்போம். அச்சமயங்களில் நாமும் விழாவில் பங்கேற்பதாய் தோன்றும். அதுபோல் இக்கட்டுரைகளில் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாவின் வாழ்வில் சில சந்திப்புக்களை ஆசிரியர் விபரிக்கும் பொழுது சுவாமி அவர்களே பிரசன்னமாகியிருப்பது போல் எங்களுக்குத் தோன்றும். இந்த உணர்ச்சி ஆத்மீக வாழ்வுக்கு மிகவும் உகந்தது.

ஞானிகளின் உபதேச மொழிகளையே முக்கியமாக நாங்கள் வாசிக்கிறோம்.ஏனென்றால் ஆசிரியர்கள் உபதேச மொழிகளுடன் நின்று விடுகிறார்கள். உபதேச மொழிகளுடன் ஞானிகளின் வாழ்க்கையில் சில சம்பவங்களையும் எழுதினால், பொதுமக்களுக்கு நூலை வாசிப்பதற்கு ஊக்கமூட்டும்.

இந்நூலின் சிறந்த அம்சம் என்னவென்றால், சம்பவத்தை கூறி முடிய அந்த சம்பவத்தின் உள் ஞான கருத்தையும் வெளியிட்டிருப்பதே. ஞானிகளின் ஒவ்வொரு செயலிலும் சொல்லிலும் அர்த்தமுண்டு. இதையறிந்து நடப்பதால் நாங்கள் மதத்தில் முன்னேறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை முன்னோடியாக கருதி சுவாமிஜி அவர்களை அடிக்கடி சந்திக்க கொடுத்து வைத்தவர்களாகிய பக்தர்கள் தங்கள் தங்கள் அனுபவங்களை நூல் வடிவமாக வெளியிட்டால் சுவாமி அவர்களின் மற்ற பக்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஞான மார்க்கத்தில் முன்னேறிச்செல்வதற்கு அது தூண்டுகோலாகும்.

35, கின்றொஸ் அவனியு, நா. மாணிக்க இடைக்காடர்
கொழும்பு - 4.
07 - 12 - 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

திருக்கோணேஸ்வரத்தில் கோணேசப் பெருமான் எழுந்தருளியிருப்பதால் அது சிவ க்ஷேத்திரமாயிற்று. சிவயோக சமாஜத்தில் சுவாமி கெங்காதரானந்தாஜி அமர்ந்திருப்பதால் அது யோகாச்சிரமமாயிற்று. கோணேஸ்வரத்தில் அரும்பி சுவாமிஜியின் தூய உள்ளுணர்வில் மலர்ந்த யோகாச்சிரமம், மக்களின் ஆன்ம யாத்திரை ஸ்தலமாக விளங்குகின்றது.

உலகின் பல பாகங்களிலுமுள்ள சிவயோக சமாஜ யோகாச்சிரம அன்பர்களின் உள்ளங்களிலே எழுகின்ற பிரச்சினைக்குரிய விஷயங்களை, சுவாமிஜி ஆச்சிரமத்தில் இருந்தபடியே உற்று நோக்கி உணர்ந்து உருகி ஊறித் தமது உள்ளத் தெளிவில் காண்கின்றார். அப்போது அவருடைய நாவிலிருந்து தத்துவ முத்துக்கள் உதிர்கின்றன. உதாரணத்துக்கு ஒன்று "யோக கர்ம கௌசல" என்பது. இதனை யோகாச்சிரம அன்பர்களுக்குச் செயலிலும் காட்டுகின்றார். சுவாமிஜியின் சொல்லிலும் செயலிலும் பிறந்த பத்தொன்பது முத்துக்களைப் பொறுக்கியெடுத்து இந் நூலாசிரியர் மிக அழகாகவும், ஆழ்ந்த பக்தியோடும் அனுபவித்து எழுதியுள்ளார். அவருடைய சாதனை மக்களுக்குப் போதனையாகவும் ஞான விருந்தாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண இதிகாசங்களினால் போற்றப்படும் மகரிஷிகள், தவ முனிவர்களின் பாரம்பரியமான பண்புகளையும், சீலத்தையும் இந்தப் பரபரப்பான உலகில் திருக்கோணமலை சிவயோக சமாஜ யோகாச்சிரமத்தில் அன்பும், அருளும், அமைதியும் நிறைந்த சுவாமிஜியிடம் காணலாம். மக்களின் உள்ளங்களில் அலையும் எண்ணங்களை சுவாமிஜி ஊடுருவி நோக்கி அவரவர்களுக்கேற்ற பாங்கில் நன்நெறிகளை உணர்த்தும் அமுத வாசகங்களாகிய தீர்க்க தரிசனங்கள் பிரம்ம வித்தையின் ஒலிகளாக ஒலிக்கின்றன. அவைகளை கண்டு, கேட்டு, அனுபவிக்க இந்நூல் உதவும்.

15, வித்தியாலயம் ஒழுங்கை, சைவப்புலவர்
திருக்கோணமலை. பண்டிதர்இ.வடிவேல்
01-11-90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

குருமுகம் - எமது குருநாதர் மனமுவந்து சூட்டிய பெயர். 1990 மார்கழி அவரது கண்காணிப்பில் பதிக்கப்பட்டு சமாஜ அன்பர்கட்கு இலவச வெளியீடாக வழங்கப்பட்டது. நூல் பிறந்த வகை - ஆசிரியர் தம் முகவுரையில் தந்துள்ளார். மீண்டும் இதனைப் பதிப்பிக்கும் எண்ணம் அவர்க்கு எழுந்ததேன் என்பதும் கோடி காட்டியுள்ளார். சுவாமிஜியின் அருளாசிக்குட்பட்டவரே இந்த மறுபதிப்பின் பெருமையை தெளிவாக உய்த்துணரவல்லார்.

சுவாமிஜியின் இறுதி நாட்கள் - கொழும்பு இரட்ணம் வைத்தியசாலையில் நகர்ந்து கொண்டிருந்த காலமது. இராப்பகலாய் தன்னைப் பாதுகாத்த அன்பன் திரு P.மௌலீஸ்வரனிடம் குருமுகத்தை வருவித்து தன்னருகிலிருந்து அதனைப் படிக்கும் படி சுவாமிஜி பணித்துள்ளார். சுவாமிஜி 14 தொகுப்புக்களை முடிக்கும் வரை அன்பர் வாசித்துள்ளார்.

வாழ்வின் யதார்த்தத்தில் நாம் சந்திக்கும் சம்பவங்களை,தமது ஆழ்ந்த ஞானத்தை குழைத்து குருநாதர் வழங்கியதை. செல்வி .தா.சியாமளாதேவி நாம் படிக்கும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புதியதோர் பார்வையில் கண்டு தந்துள்ளார். அவர் என்ன தவம் செய்தாரோ.............?

இந்நூல் குருமுகம் - சமாஜத்தால் மீண்டும் வெளியீடு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். ஞானத்தை நாளும் வழங்கி வாழ்ந்த குருவிற்கு நாம் ஆற்றும் கடனாகும். நூலை ஏற்று நம் வாழ்வை செம்மையுற அமைப்பது நம் கடனே.

மறுபதிப்பை சீரமைத்து வழங்கிய நூலாசிரியை செல்வி .தா. சியாமளாதேவி, முதற்பதிப்பிற்காக முன்னுரை - முகவுரைகளை முறையே தந்த அமரர்கள் திரு.நா.மாணிக்க இடைக்காடர், சைவப்புலவர், பண்டிதர் இ.வடிவேல், அச்சேற்றித் தந்த எஸ்எஸ் டிஜிட்டல்ஸ் பதிப்பகத்தார் அனைவர்க்கும் சிவயோக சமாஜம் தனது மனங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பித்து . குருவருள் நிறைந்திடுக என வேண்டி நிற்கிறது.

திருமதி.சித்திதேவி பத்மநாதன்,
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்,
சிவயோக சமாஜம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

எத்தனையோ பூர்வ ஜென்மங்களின் பின் அபூர்வமாக வந்து அமைவதுதான் உத்தமமான குருவின் தொடர்பு.அவருடைய கிருபையினால் அவர் வாழ்ந்த காலத்தில் அவருடன் சேர்ந்து வாழ்கைப்பயணம் அமைவது பூர்வ ஜென்ம புண்ணிய பலனாகும். குருவின் வாழ்க்கை, சொல்லும் செயலும், போதனை சாதனை நிறைந்த ஞான வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் வழிவகைகளை நிதர்சனமாகக் காட்டி நிற்கும்.

சாஸ்வதமற்ற உலகியல் தேவை கருதி, அன்றி சொந்த வேண்டுதல்களை நிறைவேற்ற குருதேவரை நான் ஒருபோதும் அணுகியதில்லை. சுவாமிஜி அழைத்த போதெல்லாம் ஏதோ ஒரு செய்தி அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்போவதாகவே உணர்ந்து கொண்டேன். பெரும் பொக்கிஷமாகவே ஒவ்வொரு கணப்பொழுதையும் நினைந்து காத்திருந்தேன்.

அவைபலதரப்பட்டவை, விளக்கமுடியாதவை, விளங்க முடியாதவையும் கூட. குருதேவரிடமிருந்து கிடைத்தவை ஒவ்வொன்றும் ஆன்மீக விளக்கத்தோடு ஏற்புடையதாக இருக்கக் கண்டேன். ஆன்மீக தத்துவங்களை எம்மால் எவ்வளவு தூரம் ஓர்ந்து உணர்ந்து புரிந்து கொண்டாலும் கூட, அவை எங்களுடைய கடுமையான முயற்சியினாலும் பயிற்சியினாலுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலன் பெறமுடியும் என்பதே உண்மை. அதை மீண்டும் மீண்டும் சிந்திப்பதனாலும் நடைமுறை வாழ்வில் பயன்படுத்துவதாலும் மட்டுமே. பயன் ஏற்படும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதற்கும் இறையருளும் பூர்வ ஜென்ம பலனும் இருக்க வேண்டும்.

எனவே என் பக்குவத்திற்கு ஏற்பவே கடுகிலும் சிறிதளவு முயன்றுள்ளேன். குருதேவரின் சைதன்ய சாகரத்தில் முற்றாக மூழ்கி பயன் கொண்டோமா என்றால், அது அறுதியிட்டு கூறமுடியாத ஒன்று. இந்நூல் ஓர் புதிய பரிமாணத்தில் வடிவமைக்கப்பட்டது. ஆச்சிரம சூழல், தலயாத்திரை, சுவாமிஜி சென்ற இடங்கள் இவற்றை மையப்படுத்தி வழங்கியுள்ளேன். சுவாமிஜியை தரிசிக்காதவர்களும், ஆச்சிரம சூழலை அறியாதவர்களும் இந்நூலைப் படிக்கும் போது மானசீகமாக அவரைத் தரிசிக்கும் உணர்வைப் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

சுவாமிஜியுடனான எனது வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் பல போதனைகளைப் பெற்றிருந்தும், அவரது ஞான அமிர்த சாகரத்தில் மூழ்கி பத்தொன்பது முத்துக்களைப் பொறுக்கி எடுத்து எழுதிக் கொண்டிருந்தேன். மேலும் தொடரமுடியாமல் போய்விட்டது. இந்நூலின் கைப்பிரதியை சுவாமிஜியின் நெருக்கமான பக்தன் திரு.சித்திஅமரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வாசித்து விட்டுத் தருகிறேன் என்று எடுத்துச் சென்றார். தலைப்பிடாத அந்தப் பிரதிக்கு அவர் "கருட பார்வை" என்று பெயரிட்டு சுவாமிஜியிடம் எடுத்துச் சென்று காண்பித்திருக்கிறார்.

சுவாமிஜி கையெழுத்துப் பிரதியை வாசித்து விட்டு இதை நூலாக்க வேண்டும் என்று கூறி எனது அனுமதியைக் கேட்டு பக்தனை அனுப்பி வைத்தார். தாமே கொழும்பில் அச்சிடும் பொறுப்பு அத்தனையையும் ஏற்றுக் கொண்டார். "குருமுகம்" என்று அழகான பெயரையும் இந்நூலுக்கு குருதேவரே சூட்டினார். 1990 ஆம் ஆண்டு இதனை அச்சேற்றி மார்கழி முற்பகுதியில் பக்தர்களுக்கு இலவசமாகவே வழங்கியும் வைத்தார் சுவாமிஜி.

1990 ஆண்டு மார்கழி மாதம்; இரண்டொரு மாதங்களாக சுவாமிஜியின் உடலில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சை அளித்தும் பலனளிக்கவில்லை. நிலைமை மோசமடையவே மார்கழி 13 ஆம் திகதி கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக பயணமானார். ரெட்ணம் வைத்தியசாலையில், நாளுக்கு நாள் அம்மகானின் உடல் நிலை மோசமடைந்து உடல் உபாதை உச்ச வரம்பிற்கே சென்றது. மரணப்படுக்கையின் போராட்டத்திலும் இதற்கு சற்றும் தொடர்பற்ற செயற்பாடுகள். அந்தப் பிரம்ம ஞானியின் பவித்திரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்ம சைதன்யத்தை சிறிதும் நெருங்கவில்லை என்பதையே பறைசாற்றியது. அவற்றுள் ஒன்றாக வைத்தியசாலையில் இரவு பகல் பணியாற்றிய பக்தன் திரு.P.மௌலீஸ்வரன் அவர்களை அழைத்து "குருமுகம்" என்ற நூலை எடுத்து வருமாறும். தனதருகில் வந்து வாசிக்குமாறும் கட்டளையிட்டார். 14 சம்பவங்கள் வாசித்த பின் நிறுத்துமாறு பணித்தார். சமாதி நிலையை அண்மித்த சமயத்தில் இந்நூல் வாசிக்கப்பட்ட காரணம் எமது சிற்றறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு விடயம். குருவருள்துணை நிற்க இதன் முக்கியத்தை மனதிலிருத்தி இரண்டாம் பதிப்பை வெளியிட முன்வந்தேன்.

இரண்டாம் பதிப்பில் ஒவ்வொரு சம்பவத்திற்கும் ஒவ்வொரு தலைப்பிட்டு மெருகூட்டியுள்ளேன். இந்நூலை அச்சேற்றுவற்கு குருபணியாக நினைத்து. நிதியதவி தந்து வாழ்த்திய திருமதி . காந்திமதி ரௌடேந்திரன் அவர்கட்கு எனது பணிவான நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

அருள்மிகு குருதேவரின் தெய்வீக திருப்பாதங்களிலும். சின்ன சுவாமிஜி. சுவாமி.ஜெகதீஸ்வரானந்தா அவர்களின் செம்மலர்ப் பாதங்களிலும் இந்நூலை சமர்ப்பணமாக்குகிறேன்.

71. பிரதான வீதி.
திருகோணமலை.
026 - 2222439

செல்வி .தா.சியாமளாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவில் நிலைத்த சிட்டுக்குருவி

பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் இதயங்களில் என்றும் பசுமையாக நிலைத்து நிற்கிறது இலங்கையின் திருகோணமலையில் அமைந்த சுவாமிஜியின் சந்நிதானமான சிவயோக சமாஜ யோகாச்சிரமம். ஞானம், தியாகம், பரோபகாரம் போன்ற விசேஷ குணாம்சங்கள் பொருந்திய காவி நிறத்தினுள் அடங்கியது அந்த அழகிய அமைதி நிரம்பிய ஆச்சிரமம்.

ஆச்சிரமத்தினுள்ளே சஞ்சலத்துடன் வருவோரை, தன் சைதன்ய அலைகளால் சாந்தி அளித்து வரவேற்கிறது முன் மண்டபம். இப் புனித மண்டபம் அவரவர் பிராரப்த கர்மவினை நீங்க, பிரார்த்தனை– சத்சங்கம் போன்ற சற்கருமங்களில் ஈடுபட்டுத் தீவினையை எரித்து நல்வினை சேர்த்திட வழிகோலுகிறது.

உள்ளம் உருகி, கண்ணீர் மல்கி, மேனி சிலிர்த்து கசிந்துருகும் பஜனைப் பாடல்களையும், மனசுக்கும் புலன்களுக்கும் இதமளிக்கும் இசை நிகழ்ச்சிகளையும் நமது செவிப்புலன்களுக்கு அம் மண்டபம் வழங்குகிறது. மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்வையும், சாத்வீக குணத்தையும் கொடுக்கக் கூடிய திரவியங்களின் ஹோம புகையையும், ஊதுபத்தியின் சுகந்தத்தையும் இம் மண்டபத்தில் நாசி நுகர்கிறது.

இறைவனுடைய நாமங்களில் மனம் ஒன்றி கூவி அழைப்பதற்கும், எம் குருவின் பெருமையையும் பேரன்பையும் நினைந்து பித்தாகப் பேசவும் நா இங்கு கொடுத்து வைத்திருக்கின்றது. இதை சிருஷ்டித்த சிற்பியின் தவக்கோலத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு வணங்கும் பேற்றையும், நமது பிறவியின் புண்ணிய பலனை எண்ணி கண்ணீர் மல்கும் பேற்றையும் நம் கண்கள் இங்கு பெறுகிறது. காற்றடைத்த நமது காயம், இவை யாவற்றுடனும் ஒருங்கு சேர்ந்து, பெரும் ஆன்மீக சுகத்தை இம் மண்டபத்தில் அனுபவிக்க பேறு பெற்றுள்ளது.

இப்பேர்ப்பட்ட பேரனுபவத்தை பல்லாயிரம் மக்களுக்கு கொடுக்கும் அருட்சக்தி, இந்த மண்டபத்தில் நிறைந்து வழிந்து, அள்ள அள்ள ஊறி வருகின்ற பெருமையை கூறாமல் இருக்க முடியவில்லை. சிறிது நேரம் மண்டபத்தில் அமர்ந்தாலே, மனச்சுமை குறைந்து வாழ்க்கையில் ஒரு பிடிப்பு, துணிவு, தன்னம்பிக்கை ஏற்படும் சுகானுபவத்தை பெற்ற பலரை, நெஞ்சார நினைந்து உருகவைக்கும் அற்புத சக்தி வாய்ந்தது அம் மண்டபம்.

ஆச்சிரம மண்டபத்தின் வலதுபுறத்தில் அமைந்த, அடக்கமானதொரு அறைதான் எம் குருஜியின் உறைவிடம். அந்த அறை வாசலில் "you are born for higher things" என்று பொறிக்கப்பட்டுள்ள வாசகம் எமது ஜனனத்தின் நோக்கத்தை ஞாபகப்படுத்துகிறது. எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்களை திசை திருப்பி, அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்திய பெருமைக்குரியது அந்தப் புனித அறை.

இத்தகைய பெருமை வாய்ந்த சுவாமிஜியின் சந்நிதானத்தில் எத்தனையோ கேள்விகளுக்கு விடை கிடைத்திருக்கிறது. எத்தனையோ சங்கடங்கள் தீர்ந்து போயிருக்கின்றன. எத்தனையோ அற்புதங்கள் மலர்ந்தும் இருக்கின்றன. எம் குருதேவரைச் சுற்றியுள்ள சக்தி வாய்ந்த அதிர்வலைகளின் சைதன்யப் பெருமையை தன்னகத்தேயடக்கி வருவோருக்கு சாந்தி அளிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியின் அந்த இருப்பிடம். அந்தச் சின்னஞ் சிறிய அறைக்குள் இருந்து கொண்டு குருதேவர், பல்வேறு கைங்கரியங்களுக்கும் அத்திவாரமிடும் புனித இடமாகவும் அது அமைந்துள்ளது.

அறையின் இடது புறத்தில் குருதேவரின் எளிமையான மரக்கட்டில்; தலைப்பக்கத்தில் ஒரு சிறு அலுமாரி; கால் பக்கம் உயரம் குறைந்த சிறிய மேசை; மேசையின் மேல் ஒரு கூடை, ஒரு தோல் பையும் காணப்பட்டன. அறையின் வலது பக்கத்தில் ஒரு பெரிய மேசை; அதன் மேல் அழகிய மேசை விரிப்பு; அதில் ஒரு புறம் நேர்த்தியாக அடுக்கப்பட்ட புத்தகங்கள்– கடிதங்கள்; மறுபுறம் வெள்ளித்தட்டொன்றில் ஏற்றி வைக்கப்பட்ட ஊதுபத்தி; அறை முழுவதும் நிறைந்திருந்த அதன் சுகந்தம்; மேசையின் நடுப்பகுதியில் சுவருடன் சாத்தியபடியே நடுத்தர அளவுடைய நிலைக்கண்ணாடி .

இந்த மேசையின் கீழ்புறத்தில் மூன்று நான்கு பூசணிக்காய்கள் அநேகமாக எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். பாடுபட்ட பாட்டாளிக்கு தோலோடு பூசணிக்காய் என்று நம் முன்னோர் கூறும் பழமொழி தான் ஞாபகத்துக்கு வரும். சுவாமிஜியின் சந்நிதானத்தில் எப்போதும் ஓர் ஆழமான உள்ளார்த்தத்தைத்தான் அது வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

மேசையின் நடுவில் இருந்த கண்ணாடிக்கருகில் பூர்வ வாசனையின் தொடர்பு போலும், அழகிய சிட்டுக் குருவியொன்று மிக நெருக்கமாக நின்று, கண்ணாடியை நோக்கிப்பார்த்தபடியே நின்று கொண்டிருப்பதை, சுவாமிஜியை தரிசிக்கச் சென்ற வேளைகளில் அவதானித்தேன். சுவாமிஜி ஆச்சிரமத்திற்கு வெளியே செல்கின்ற நேரங்களில் அது வெளியேறி, ஆச்சிரமத்திற்கு அவர் திரும்பியதும் குருவியும் மேசைக்கு திரும்பிவிடும். கண்ணாடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்று நோக்கிய வண்ணமே இருக்கும். இப்படியாக சில மாதங்கள் தொடர்ந்து அந்தக் கண்ணாடியோடு அசைவின்றி நின்று கொண்டிருக்கும் காட்சியை எல்லோரும் பார்க்கக்கூடியதாயிருந்தது. அச் சிறு பறவை பசியாற்றுவதற்கென சில தானியங்கள் சுவாமிஜியின் திருக்கரங்களினால் போடப்பட்டிருக்கும். எனினும் உணவில் நாட்டம் காட்டியதாகத் தெரியவில்லை. பார்க்கின்ற வேளைகளிலெல்லாம் தன் விம்பத்தை கண்ணாடியில் உன்னிப்பாகப் பார்த்தபடியே சிறிய அசைவுமின்றி நிற்பது , வினோதமான உணர்வையே கொடுத்தது.

**பல ஜென்மங்களின் வழிவந்த வாசனை தான், குருதேவரின் சந்நிதானம் வந்து அவர் பாதங்களை அடைந்திருக்கிறதா இந்தச் சிட்டுக்குருவி ............... !**

**தன்னை மறந்து, தன் உணர்வு கெட்டு, தவத்தின் உயர் நிலையை அடைந்துவிட்டதா.................!**

**கண்ணாடியில் பிரதிபலிக்கும் உருவம் தான் தனது ஆத்ம சொரூபம் என நினைந்து அவ்வுணர்வில் கரைந்து விட்டதா..........!**

**மாறுபடும் தன்மையான தன் உடலையும், மாறாத பெரு நிலையான ஆத்மாவையும் உணர்ந்து ஆத்ம சைதன்யத்தில் நிலைத்து விட்டதா..............!**

திரிகாலமும் உணர்ந்த சுவாமிஜியே அறிவார். சுவாமிஜியின் தரிசனத்தைப் பெற அப்புனித அறைக்கு வந்து செல்லும் பக்தர்களுக்கு, ஓர் ஆழமான போதத்தை இந்த அழகிய சிட்டுக்குருவி கொடுத்துச் சென்றமை பலகாலம் பக்தர்கள் மனதை விட்டு அகலவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமசித்தபாவனை

ஒரு நாள் காலைப்பொழுது; சுவாமிஜியைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்துச் சென்றிருந்தேன். ஸ்நானம் செய்து, ஆகாரம் முடித்து, தெய்வீக பொலிவுடன் கூடிய ஞானமலராக மலர்ந்திருந்தது அத்திருவுருவம். எத்தனை தடவை நம் குருதேவரை தரிசிக்கச் சென்ற போதிலும், புதுப் பொலிவுடன் கூடிய நோக்குத்தான் அங்கு இருக்குமே தவிர, ஏற்கனவே பார்த்த களை இருப்பதில்லை.ஆத்மா முற்றும் தைலதாரை போன்று இடையறாது பொங்கிவரும் பக்தியுணர்வு ஒருபொழுதும் தெவிட்டுவதற்கில்லை. சுவாமிஜியின் முன்னிலையில் உள்ளம் கசிந்து முழு உணர்வும் அவர்பக்கம் இருக்கும் பட்சத்தில், ஞானஅக்கினியான அவ்வொளிப் பிளம்பின் வெப்பத்தில், எம் வினையை எரித்த புண்ணிய பலனைத்தான் பெறுவதாக உணர்கிறோம்.

அன்றைய சந்தர்ப்பத்தில் குருஜியின் பிரசன்னத்தின் முன் அமர்ந்திருந்தேன். அந்நேரத்தில் நான்கே வயது நிரம்பிய பச்சிளம் குழந்தை ஒன்று ஆச்சிரம மண்டப வாயிலினூடாக சுவாமிஜியின் அறையை நோக்கி ஓடி வந்தாள். கையில் ஒரு படமும் வைத்திருந்தாள். எந்தவித அச்சமுமின்றி, சுவாமிஜியின் அருகில் நெருங்கிச் சென்று, படத்தைக் காட்டி தன் மழலைச் சொற்களினால் புரிந்தும் புரியாமலும் ஏதோ பேசினாள். அக் குழந்தையோடு குழந்தையாக சுவாமிஜியும் மாறிவிட்டார். மிகக் குழைவாக உரையாடலானார்.

அவள் சுவாமிஜியுடன் பேசுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. ஒவ்வொரு கணமும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். நிலத்தில் விழுந்து புரண்டாள்; எழுந்தாள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிக் குதித்தாள்; சுற்றினாள்; அங்குமிங்கும் ஓடினாள்; தனக்குத்தானே சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தி சிரித்துப் பேசி மகிழ்ந்தாள். இறுதியில் " போயிற்று வாறன் சுவாமிஜி " என்று மழலை பேசியபடியே குதித்தோடி மண்டப வாயிலாக ஓடி மறைந்தாள்.

ஒரு சில நிமிட நேரம் அந்தப் பச்சிளம் குழந்தை ஓர் உயர்ந்த போதனையைத் தன் செயற்பாட்டினால் அள்ளித் தெளித்து விட்டுச் சென்று விட்டாள். ஆரோக்கியமானதோர் குழந்தை உண்ணுகின்ற உறங்குகின்ற நேரம் தவிர, மற்றைய நேரங்களி - லெல்லாம் உற்சாகத்துடன் ஓய்வின்றியே செயற்படுகிறது. **பௌதீக உலகில் லௌகீக வாழ்க்கையில் சுகதுக்கங்கள் வருவது தவிர்க்க முடியாதது. அவற்றுள் வீழ்ந்து ஆழ்ந்து விடுகிறோம்.**

**விழுந்த அக்குழியினின்றும் எழுந்து, சுகதுக்கங்களால் விகாரமடையாமல் எதிர்த்து நின்று, சமநிலையில் சமசித்த பாவனையை நாமாகவே சுயமாகவே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.** இப் பயிற்சியின் உட்கருத்துப் பொதிந்ததொரு போதனையை, இந்தக் குழந்தை காண்பித்துச் சென்றது கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய சம்பவமாக அமைந்திருந்தது. எம்மேல் விழுவது மணலாகவோ, கல்லாகவோ எதுவாக இருந்தாலும், மலராகவே கருதி சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய அர்த்த புஷ்டி நிறைந்த சுவாமிஜியின் தத்துவத்தை அச்சமயம் திருவாக்காகப் பெற்றதில் மனம் நிறைந்து வீடு திரும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுபாவ மாற்றம்

ஒரு சமயம் புண்ணியதினமான சிவராத்திரி நன்னாளில், ஓர் அழகிய பெண்மான், தன் வயிற்றில் குட்டியைத் தாங்கிய நிலையில் சுவாமிஜியின் சந்நிதானத்திற்கு வந்து சரணாகதி அடைந்தது. திருக்கோணேஸ்வர ஆலய சூழல், மானும், மந்தியும், மகிழ்ந்து திரியும் அமைவு கொண்டது. அங்கிருந்து தான் இம் மான் தன் குருதேவரின் பாத கமலங்களை நாடி வந்தது. நல்ல நேர காலத்துடன் கூடிய உத்தமமான வேளையில் பல உயிர்களின் சந்திப்பு யோகிகள் – ஞானிகளிடத்தில் அமைந்து விடுகிறது. அதற்கு எந்த உயிரினமும் விலக்கல்ல என்பது போல், இந்த அழகிய மான் சரணடைந்தது.

ஆச்சிரமத்தின் முன்புறத்தே அதற்கென மரத்தாலான பெரியதோர் கொட்டில் சுவாமிஜியின் கட்டளையால் அமைக்கப்பட்டது. ஆச்சிரமத்திற்கு வருவோரைப் பார்த்து பயந்து மிரண்டு விடும் அந்த மான், சுவாமிஜியின் இணக்கத்தில் சாந்தத்தோடு பணிந்து நிற்கும், காலையும் மாலையும் இரு வேளையும் ஸ்நானஞ் செய்ய சுவாமிஜி செல்கின்ற வேளையில் அதற்கென ஏதாவதொரு உணவைக் கொண்டு சென்று கொடுத்த பின், தன் திருக்கரங்களால் அதை ஸ்பரிசித்து – கனிவோடு பேசிய பின்பு தான் அதனிருப்பிடத்திற்கு அருகிலமைந்த குளியலறைக்குச் செல்வார். தாயின் பரிவுடன் சுவாமிஜியின் திருக்கரத்தால் ஊட்டும் சாதாரண உணவை அம்மான் மகிழ்வோடு ஏற்று உண்டு களிக்கும்.

ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமல்ல, உயிரினங்கள் யாவும் எம் குருவின் அன்புக்கு இலகுவாக வசமாகிவிடும். நாட்கள் செல்லச் செல்ல அந்தமானின் நடைமுறையில் யாவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயிக்கும் வண்ணம் வித்தியாசங்களைக் காணக்கூடியதாக இருந்தது. அதன் இயற்கையான உணவைத் தவிர்த்து, ஆச்சிரமத்தில் கொடுக்கும் சாதாரண உணவை உண்டு, தன் இயல்பான சுபாவ குணங்களினின்றும் மாறுபட்டு, இயற்கைக்கு விரோதமான உணவு சுற்றாடலுடன் மகிழ்ச்சியாக காலம் கழித்தது.

அதுமட்டுமல்ல; தன் முகத்தை மரப்பலகைகளின் இடைவெளியூடாக வெளியே நீட்டி, தன் நீண்ட அழகிய விழிகளால் புத்துணர்ச்சியுடன் உற்று நோக்கியபடியே நிற்கும் காட்சி, அங்கு வந்து செல்வோருடைய சிந்தனையைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தது. **ஏ மனிதா! சிற்றறிவு படைத்த நான், எனது சுபாவ குணங்களினின்றும் மாறுபட்ட உணவு சுற்றாடலுடன் மகிழ்ச்சியாக இந்த தூய சக்தியின் திருப்பாத கமலங்களில் சரணடைந்து நிற்கிறேன். பெறுதற்கரிய மனிதப் பிறவியை எடுத்த நீ, இத்தகைய உயர்ந்த சத்சங்கத்தில் உன் பிறவியின் நோக்கத்தை ஒரு முறையேனும் ஆழமாகச் சிந்தித்தால் என்ன?** என்று கேட்பது போல் ஆச்சிரம நுழைவாயிலில் சில காலம் முகாமிட்டிருந்து ஒரு ஆழமான போதத்தையே அம்மான் புகட்டிச் சென்றது. பேறு பெற்ற இம்மானுக்கு சுவாமிஜியினால் அன்புடன் சூட்டப்பட்ட நாகமரணம் ' பஞ்சமி ' ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலில் சிரத்தை

ஒரு நாள் உச்சிவேளை் சுவாமிஜி அவர்களைத் தரிசிக்கும் பேறு பெற்றிருந்தால் அவர் சந்நிதானத்தில் அமர்ந்திருந்த வேளையது. தம் சொந்த கருமங்களின் பொருட்டு சுவாமிஜியை அணுகிய பலரால் அப்புனித இடம் கலகலப்பாக இருந்தது. ஆச்சிரமத் தேவையையிட்டு ஆச்சிரமவாசி ஒருவர் வந்து சென்றார்.ஆலய கட்டட வேலை சம்பந்தமாக இன்னொருவர் வந்தார். வயலில் வேலை செய்யும் தொழிலாளியும் வந்து சென்றார். இவற்றிடையே இரண்டொரு நிமிட தரிசனத்தில் தமது உள்ளச் சுமைகளை சுவாமிஜியின் திருப்பாத கமலங்களில் இறக்கிவிட்டும் சிலர் சென்றனர்.

நிமிடத்திற்கு நிமிடம் எதிர்மாறான திசைகள். ஆயினும் எல்லாக் காரியங்களையும் ஏற்று, மலர்ந்த முகத்துடன் பதிலளித்து கடமையாற்றிக் கொண்டிருந்தார் சுவாமிஜி. இத்தனைக்குமிடையில் சில பக்தர்களின் பிரச்சினைகளை என்னிடமும் பேசியபடியே, பயனில்லாமல் போகக்கூடாதென போதிய நெல்லிக்கனிகள் சுவாமிஜியினால் உப்பில் போடப்பட்டன. மிதமான காய்கறிகள் அளவாக வெட்டப்பட்டு வற்றலுக்கு காயவைப்பதற்கென, ஆச்சிரமவாசி ஒருவரிடம் அனுப்பப்பட்டது.

இவ்வளவு கருமங்களுக்குகிடையிலும் சிறிதும் தளர்ச்சியின்றி, நாளை என்றில்லாமல், காய்கறிகளைப் பக்குவப்படுத்தி, கூடிய வேலைகளை குறுகிய நேரத்திலாற்றும் எம் குருவின் செயற்திறனைக் கண்டு ஒரு கணம் வியப்பில் ஆழ்ந்தேன். பல்வேறு உலக காரியங்களில் அவர் மூழ்கியிருந்த போதும், சற்றும் பதட்டமற்றவராக நாளை என்று கருமங்களைப் பின் போடாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனுக்குடன் சுதந்திரமாகத் தனித்து நின்று செயலாற்றும் துணிவு நம்மைப் புல்லரிக்கச் செய்து விடும்.

**எந்த பொருளும், அது சிறியதாயினும் பெரியதாயினும் சிரத்தையுடன் அவதானிக்கும் பொழுது, அது பயனுள்ள பொருளாக** மாறிவிடுகிறது. மனிதன் **ஒவ்வொரு கருமத்திலும் சிரத்தையுடன்** செயற்படாமையினால் **தான், அவன் கஷ்டங்களையும் துன்பங்களையும் தேடிக்கொள்கிறான்** என்பது எமது குருதேவரின் கருத்தாகும். சிறு கருமமாயினும் அதில் சிரத்தை இருக்க வேண்டியதன் அவசியம், அச்சிறு பொழுதில் சுவாமிஜி அவர்களால் உணர்த்தப்பட்டது.

## உலகின் யதார்த்த நிலை

அழகுற அமைந்த ஆச்சிரமத்தின் எதிரே ஓர் அடக்கமான அறை அமைக்கப்பட்டிருந்தது. வசதியாக கட்டப்பட்ட அறையினுள் எம் குருவின் மோட்டார் வாகனம் விடப்பட்டிருந்தது. சுவாமிஜியின் ஜேர்மன் நாட்டு பக்தன் ஒருவரால் மனமுவந்து அளிகப்பட்டதே அந்த சிகப்பு நிற volks wagan வாகனம்.

இந்தக் கட்டிடத்தின் அருகே, முழுவதும் தகரத்தால் அமைக்கப்பட்ட கொட்டிலில் ஆச்சிரம உழவுயந்திரம் ஒன்று காணப்பட்டது. சுவாமிஜியின் சந்நிதானத்தில், இந்தச் சாதாரண காட்சி கவர்ச்சியுடைய உயர்வான உட்பொருளை தன்னகத்தே கொண்டதாக அமைந்திருந்தது. நாள் முழுவதும் ஓடாக உழைத்து தரும் உழவுயந்திரத்தினால் கிடைக்கும் வருமானம் பல மடங்காகும். தகரக் கொட்டிலில் தன் பெருமையை பறை சாற்றாமலே அமைதியாக அடக்கமாக நிற்கிறது அந்த உழவுயந்திரம். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் அருகாமையில் விலையில் உழவுயந்திரத்தின் மூன்றில் ஒரு பங்கு விலையுடையதான, கண்ணுக்கு கவர்ச்சியாகத் தோன்றும். மோட்டார் வாகனம் பாதுகாப்புடன் கூடிய அறைக்குள் அழகாக நிறுத்தப்பட்டிருந்தது. அதன் மேல் அழுக்குப் படியாவண்ணம் புதிய வெள்ளைத் துணியுமிட்டு மூடப்பட்டிருந்தது. கவர்ச்சியான சிவப்பு நிறம் பொருந்திய அம் மோட்டார் வாகனத்தை வருவோர் போவோர் கூட நின்று பார்க்கத் தவறவில்லை. உழவு யந்திரத்தினருகே யாருமில்லை.

இன்றைய உலகின் யதார்த்த நிலையை உணர்த்தி நிற்கின்றது இந்தச் செயற்பாடு என்பதை மறுப்பதில்லை. தொழிலாளர்களை இன்றைய சமுதாயம் கணிக்கும் தன்மைக்கு நல்லதோர் போதமாக இந்தக் காட்சி அமைந்திருந்தது. மனித மனத்தின் வினோதமான பிரதிபலிப்புகளைப் பார்த்து நாம் என்ன தான் கணிக்க முடியும்?

## கர்ம கௌசல யோகம்

பொழுது விடிந்து சாயும் வரை எம் குருவின் திவ்விய தரிசனத்துக்காகவே காத்திருக்கும் என் மனம், தரிசனம் கிடைத்து விட்டால், வெந்நீர் கண்ட ஜீவ மூலிகை போன்று புத்துணர்ச்சி பெற்று மலரும். அன்று காலை அப்பேறு பெற்று சுவாமிஜியின் சந்நிதானத்தில் நின்றிருந்தேன். அன்று திருவெம்பாவை தினத்தின் ஒன்பதாவது நாள். மறு நாள் நடேசர் ஆலயத்தின் விசேஷ உற்சவமான ஆரூர்த்ரா தரிசனம்.

கடந்த ஒன்பது தினங்களும் நித்திரையின்றி, கிரமமான உணவு, ஓய்வு எதுவுமின்றி, ஆலய கருமங்களைத் தன் நேரடியான மேற்பார்வையிலே ஆற்றிய தளர்ச்சியை சிறிதும் வெளிக்காட்டாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாளுக்கு வேண்டிய ஆயத்தங்களை மிகச் சுறுசுறுப்பாகச் செய்து கெண்டிருந்தார் சுவாமிஜி.

ஆச்சிரம தொண்டர்களிடமும், செய்ய வேண்டிய வேலைகளுக்கான கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டும், ஒவ்வொரு கருமமாக சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருந்தார். அடுத்தவர்களிடம் பணித்த கருமங்களை அத்தோடு விட்டுவிடுவதில்லை. தனது நேரடியான கண்காணிப்புக்கு உட்படுத்தி அந்தக் கருமத்தை சம்பூரணப்படுத்துவதும் எம் குருவிடத்தில் காணப்படும் தனிச் சிறப்பாகும் . அவரது செயலும், நடையும், உணர்வும், தூய வாழ்வுமே, பக்தர்களை நல்வழியில் செலுத்திட வழிகோலும்.

இதற்கிடையில் பல்வேறு கருமங்களைப்பற்றி என்னிடம் பேசியபடியே செயலில் ஈடுபட்டிருந்தார். மறுநாள் நடேசர் ஆலயத்திற்கு தீர்த்தக்கலசம் எடுத்துச் செல்வதற்கென ஒரு வெள்ளிக்குடம் சுவாமிஜியினால் எடுத்து வைக்கப்பட்டது. **தன்னை ஆட்கொண்ட கோணைநாதனின் பாபநாச சுனையிலிருந்தே நடராஜப்பெருமானுக்கு அபிஷேகத் தீர்த்தமாக ஒரு நாள் முன்பாகவே சுவாமிஜி பெற்றுக்கொள்வது வழக்கம்.** மறுநாள் ஆச்சிரமத்திலிருந்து நடேசர் ஆலயத்திற்கு ஊர்வலமாக தீர்த்தக் கலசத்தை எடுத்துச் செல்வதற்கும் ஒரு பக்தனுக்கு உத்தரவிடப்பட்டது.

இவ்வேளை ஆச்சிரமவாசி ஒருவர் வந்தார். "சுவாமிஜி ! சமையலுக்கு அரிசி இல்லை. நெல்லுக் குற்றித்தான் அரிசி எடுக்க வேண்டும்" என்றார். ஒரு சில விநாடி யோசித்து விட்டு "பத்தாயத்தை திறந்து பாருங்கள்" என்று பணித்தார். அதற்குள் நெல், உமி போக்கி துப்பரவு செய்யப்பட்ட அரிசி ஐந்து கொத்து இருந்தது. மலர்ந்த முகத்துடன் அதைக் கொடுத்து அனுப்பினார். சிறிதும் தாமதமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு ஆச்சிரமவாசி வந்தார். சுவாமிஜியிடம் ஆலயப் பிரசாதத்திற்கென அரிசி மா, உழுந்து மா, இன்னும் வேறு சில பொருட்கள் தேவையென கேட்டுக்கொண்டார்.

பத்தாயத்தின் மேற்புறத்தில் ஒரு குடும்பத்தின் அவசர சமையலுக்கு தேவையென அத்தனைப் பொருட்களும் குறைவின்றி சேமிக்கப்பட்டிருந்தன. மரக்கறி வற்றல், தானிய வகை, தயாரிக்கப்பட்ட உணவிலிருந்து தேவையான பொருட்கள் யாவும் காணப்பட்டன. எத்தனையோ நெருக்கடியான பல வேலைகளுக்குள்ளும், உலக சேமத்திற்காகவும் சாந்திக்காகவும், நலனுக்காகவும், தமது பக்தர்களின் துயர்துடைக்க அல்லும் பகலும் தன் சக்தியைச் செலவிடும் உயர் பணியிலும், இத்தகைய செயற்திறனைக் கொண்டு விளங்குவதற்கு நேரம் உள்ளதா என்றால், அதுவும் ஆச்சரியமான விடயம் என்றே கூறலாம்.

அங்கு வரும் பக்தர்களுக்கு உயர்ந்த பாடமாகக் காணும் பிரத்தியட்சமான ஒரு செயல் இது. தேவையான அத்தனை உணவுப் பண்டங்களும் பொருட்காட்சி போல சுற்றிவர இருந்தும் , எம் குருவின் பழுத்து முதிர்ந்த ஞானப்பசிக்கு முன், வயிற்றுப் பசிக்குரியவை பிரயோசனப்படாமலே இருக்கும். ஆச்சிரம சீடன் கேட்ட அத்தனை பொருட்களையும் பக்குவமாக எடுத்து மடித்து சிறிதும் தாமதமின்றி எவ்வித சலிப்புமின்றிக் கொடுத்தனுப்பினார். அந்த நேரம் கர்ம கௌசல யோகம் என்பதற்குரிய ஒரு பிரத்தியட்ச உதாரணந்தான் தெளிவாக விளக்கப்பட்டது.

**ஒரு கர்மத்தைப் பற்றிய கௌசலம் ( செயற்திறன்– skill ) எவருக்கு இயல்பாக இருக்கின்றதோ, அவர்கள் திடமான மன சக்தியுடன் கருமத்தை சாதித்து விடுவார்கள். இது தான் கர்ம கௌசல யோகம். கர்ம கௌசல யோக முறை என்றால், தங்கள் கடமைகளை விழிப்போடும், விவேகத்தோடும் செய்து அதனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகமாக மாற்றுவது என்று பொருள். யோகம் என்றால் இறைவனோடு சேர்த்துவிடுவது என்றும் பொருள் உண்டு.

ஓர் போர் வீரனுக்குரிய லக்ஷ்ணம் அவனது ஒரு அம்பு குறி தவறி விழுந்தாலும், மாற்று அம்பு எய்துவதற்கு அவன் ஆயத்தமாக இருக்க வேண்டும். கருமங்களில் சிறிய கருமம், பெரிய கருமம் என்று பாகுபாடு இல்லை. கருமம் எல்லாமே ஒன்று தான். அன்றாட வாழ்க்கையில் எங்கள் கடமைகளை , அக் கருமம் பற்றிய கௌசலம் தெரிந்து, யோகமாக மாற்றக்கூடியவாறு, உணர்ந்து நடந்து கொள்ள வேண்டிய உயர்ந்த தத்துவமாக அன்றைய சம்பவம் உணர்த்தப்பட்டது.

## வாழ்வின் போராட்டம்

சுவாமிஜியின் கட்டளையின் பேரில் ஆச்சிரமம் சென்றேன். ஆச்சிரமத்துக்கு முன்புறம் சுவாமிஜியினுடைய signal volks wagan மோட்டார் வாகனம் விடப்பட்டிருந்தது. அதை ஒரு சாதாரண மோட்டார் வாகனம் என்று கருதுவதற்கு மனம் ஒருபோதும் ஏற்பதில்லை. சுவாமிஜியைத் தாங்கிச் செல்லும் வாகன ஊர்தியல்லவா அது?

நான் மண்டப வாயிலை அடைந்ததும் செவிப்பறை அதிரும் வண்ணம் டாண் – டாண் என்ற பெரிய சத்தம் கேட்டது. ஓசை வரும் திசைக்குத் திரும்பினேன். சுவாமிஜியின் மோட்டார் வாகனம் விடப்பட்டிருந்த அறையிலிருந்து தான், அந்தப் பெருஞ் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. வாகனத்தின் உறுப்புக்கள் பகுதி பகுதியாக கழற்றப்பட்டு திருத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனத்தின் பகுதி ஒன்றை சரி செய்வதற்கான பெரிய சுத்தியல் ஒன்றினால் அவ்வாறு அடித்துக் கொண்டிருந்தார்கள். மண்டபத்தினுள்ளே நுழைந்ததும் சுவாமிஜி அவர்கள், தன் காவி வேட்டியின் கீழ் தலைப்பை ஒரு கையால் தூக்கிக் கொண்டு, மற்றைய கையை கம்பீரமாக முன்னும் பின்னும் அசைத்தபடியே மண்டபத்தில் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தார். சுவாமிஜியின் நடையில் எப்போதும் ஒரு உற்சாகமுள்ள இளைஞனின் துடிப்பும் கம்பீரமும் காணப்படுவது ஒரு விசேஷம்.

சுவாமிஜியின் பின்னே அவருடைய புனித அறைக்குச் சென்று பாயில் அமர்ந்தேன். அன்றைய உரையாடல் மோட்டார் வாகன அறையில் ஓங்கி விழும் அடியிலிருந்தே ஆரம்பித்தது. மனித மனம் இரண்டரை நிமிடங்களுக்கு ஒருமுறை மாற்றமடைந்து கொண்டிருக்கும். இதனால் அவனை ஒருபோதும் நம்பவோ விசுவாசிக்கவோ முடிவதில்லை.

**எனவே எம்மில் விழுகின்ற எத்தனையோ ஆயிரம் சுத்தியல் அடிகள் தான், எம்மைப் பதப்படுத்தி , ஓர் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை. அதில் மனத்தளர்ச்சி ஏற்படாமல் வாழ்க்கையின் போராட்டங்களுக்கு எதிர்த்து நிற்க வேண்டியது, ஓர் தவிர்க்க முடியாத பேருண்மையாக அச்சமயத்தில் சுவாமிஜியினால் உணர்த்தப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமபாவனை

காலை நேரம்; சுவாமிஜி அவர்கள் வயல் வேலை ஆரம்பித்ததன் காரணமாக, வயலில் சில நாட்கள் தங்கி ஆச்சிரமம் வந்து சேர்ந்தார். சுவாமிஜியின் பணிப்பில் ஆச்சிரமம் சென்றிருந்தேன். ஆறு மாத காலம் தன் பக்தர்களின் விருப்பத்தை ஏற்று, ஆச்சிரம பட்டு மிதிப்பில் எம் குருவின் திருப்பாதங்கள் பட்டு நிற்கும். அடுத்த ஆறுமாத காலமும் சேற்றிலும் சகதியிலும் அந்த மலர்ப்பாதங்கள் சென்று வரும்.

வயலிலே தொழிலாளர்களுடன் சேர்ந்து வெயிலில் காய்ந்து, கொட்டும் பனியில் மிருகங்களுடன் போராடி, காவல் காத்து, உறக்கமும் கிரமமான உணவும் ஸ்நானமும் இன்றி, செம்மேனி கறுத்து வயலில் இருந்து திரும்பிய அத்திருவுருவை பார்த்த வேளை, நெஞ்சமெல்லாம் பாரமாக கனத்தது.

ஓடுகின்றவனுக்கும் ஓடுகின்றவனைத் துரத்திக் கொண்டு செல்பவனுக்கும் ஒரே தொழிற்பாடு தான் நடைபெறுகிறது. எந்தக் கருமத்தை எடுத்துக் கொண்டாலும் அதனுடைய செயல் தான், சுவாமிஜினுடைய ஒரே இலக்கு, அதனோடு ஒன்றி விடுவார். ஊண், உறக்கமின்றி, உடலை இம்சைப்படுத்தி உலகுக்காக ஏன் இப்படி உழைக்க வேண்டும்? என்ற கேள்வி ஒவ்வொரு பக்தரின் உள்ளத்திலும் எழுந்து நிற்கும்.

இத்தனை உடற்களையிலும் அன்று சிங்கக்குட்டி போன்று சுவாமிஜி இயங்கிக் கொண்டிருப்பதை பார்த்த பொழுது வியப்பாக இருந்தது. அருடைய திருமுக மண்டலத்தில் எப்போழுதும் மலர்ந்து நிற்கும் புன்னகை கூட வாடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி ஆச்சிரமத்தில் வந்துவிட்டால் அவரின் தூய தரிசனத்திற்காக காத்திருக்கும் பக்தர்கள் முகர்ந்து பிடித்து விடுவார்கள். அவர்களும் சுவாமிஜியின் தரிசனத்திற்காக காத்திருந்த வேளை, வயல் தேவைக்காக அவசரமாக அந்நேரம் பணம் தேவைப்பட்டது. அடுத்தடுத்து நெருக்கடியான காரியங்களும் வந்துவிட்டன.

தேவைக்கென பத்திரப்படுத்திய கூடிய தொகையான பணத்தை சுவாமிஜி எடுக்கச் சென்ற சமயம் அங்கு அதனைக் காணவில்லை. சுவாமிஜியினால் கைமாறி வைக்கப்பட்டமையால் எங்கு தேடியும் எடுக்க முடியவில்லை. பணம் வைத்த இடம் ஞாபகத்திற்கு வரவில்லை என்று மட்டும் கூறிவிட்டு, மலர்ந்த முகத்துடன் அடுத்த கருமத்தில் இறங்கி விட்டார்.

உடற்களை ஒருபுறம்; நெருக்கடியான கருமங்கள் மறுபுறம்; இந்தச் சூழ்நிலையில் அவரிடத்தில் எந்தவித சலனமும் இல்லை; சினமில்லை; கோபம் இல்லை. மதியம் உணவருந்தி சிறிது நேரம் இளைப்பாறிய பின், திரும்பவும் சுவாமிஜி தேடிய சமயம் ஒரு புத்தகத்துள் மடித்த படியே அந்தப் பணம் இருக்கக் கண்டெடுத்தார்.

பணம் கிடைத்த பின்பு என்னை அழைத்து தான் பெற்றுக் கொண்டதை தெரிவித்தார். அவசர தேவையின் நிமித்தம் அந்தப் பணத்தை காணவில்லை என்ற பொழுதும் சரி, கிடைத்த பொழுதும் சரி, உடற்களைப்பிலும் அவரிடத்தில் எந்தவித சலனமும் இருக்கவில்லை. தரிசிக்க வரும் பக்தர்களையும் இன்முகத்தோடு வரவேற்றார். கருமத்திலும் அதன் பயன்களிலும் பற்று – பதட்டம் – மனத்தளர்ச்சி ஆகியவற்றை சிறிதும் வெளிக்காட்டும் முயற்சிகள் அற்றவராக விளங்கியது, தனி மனிதனைப் பொறுத்த வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியப்படாத செயலாகும்.

வாழ்க்கையில் மிகச் சிறிய சம்பவங்கள் என்றாலும் , பாரதூரமான கஷ்டங்கள் என்றாலும், சமபாவனை என்பது நாளாந்தம் அப்பியாசிக்க வேண்டிய முக்கிய பயிற்சியாகும். இராமரை பதினான்கு வருடம் வனவாசம் அனுப்பிய நேரத்தில், எவ்வித சலனமும் இன்றி அவர் மலர்ந்த முகத்துடன் காட்டுக்குச் சென்றார். வனவாசத்தில் இருந்து திரும்பி வந்த நேரத்திலும், அதே மலர்ந்த முகத்துடன் தான் திரும்பி வந்தார்.

சிறிய பிரச்சினைகள் என்றாலும் பெரிய பிரச்சினைகள் என்றாலும் தளர்ச்சி இல்லாத, சலனமடையாத, துக்கித நிலையற்ற சமபாவனைக்கு ஓர் உயர்ந்த உபதேசமாக அன்றைய நிகழ்ச்சி சுவாமிஜியின் சந்நிதானத்தில் மலர்ந்திருந்தது .

## உழைப்பின் பலன் அவனருளே

வைகாசி விசாக தினத்தையொட்டி திருமலையில் பௌத்த மக்களால் புத்தருடைய திவ்விய வரலாறுகளை வர்ண ஓவியங்களில் தீட்டி, அவற்றைச் சுற்றி வண்ண வண்ண மின்குமிழ்கள் பிரகாசிக்க பந்தல்கள் அமைக்கப்படுவது வழக்கம். புத்தரது ஜனனம், ஞானம் பெற்றது இரண்டும் இவ்விசேஷ தினமே என்பதால் மிக விமரிசையாகக் கொண்டாடப்படும். இவ் விசாக தினத்தையொட்டி நான்கைந்து நாட்கள் நகரமே விழாக்கோலம் பூண்டிருக்கும்.

தெருவெங்கும் சனசமுத்திரம். இத்தகைய ஜனசந்தடியான விழாக்களில் கலந்து கொள்வதற்கு என் மனம் ஒரு போதும் விரும்புவதில்லை. அன்றைய தினம் பஸ்தரிப்பு நிலையத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்த அலங்கார பந்தலைச் சென்று பார்க்க வேண்டும் என, அல்லும் பகலும் சுவாமிஜியின் திருப்பாதங்களையே வளைய வரும் ஒரு பையனிடம் சுவாமிஜி எனக்கு கட்டளை பிறப்பித்தார்.

சுவாமிஜியின் கட்டளையை மீற உள்ளம் இடம் கொடுக்கவில்லை. திருமலை நகரின் பிரதான அலங்காரப் பந்தல் அமைந்து விளங்கும் இடம் இந்த பஸ்தரிப்பு நிலையமே. பொழுது மங்கி பூரண சந்திரன் உதயமான வேளையில், நாங்கள் ஆச்சிரம பக்தர்களுடன் வெசாக் பந்தல்களை பார்ப்பதற்காக சென்றேன். நாங்கள் சென்ற சமயம் அலங்கார மின் விளக்குகள் சில எரியவில்லை. சில நிமிடங்களில் இன்னும் பல மின்விளக்குகள் ஒளியிழந்தன.

சிறிது நேரத்தில்அந்த விசாலமான இடம் இருள்மயமாகியது. சுவாமிஜியின் காத்திரமான கட்டளையும் இந்தக் காட்சியும் பெரும் சிந்தனையை தூண்டிவிட வீடு திரும்பினோம். மறுநாள் சுவாமிஜியின் அழைப்பின் பெயரில் சென்ற பொழுது இதற்கான விடை கிடைத்தது.

நாளுக்கு நாள் பணம் சேர்த்து, பல நாட்கள் வியர்வை சிந்தி உழைத்து, பல இலட்ச ரூபாய் செலவு செய்தும் அங்கு பல மின் விளக்குகள் ஒளிபரப்பாமலேயே இருளோடு இருளாகி கிடந்தது. **பல மணித்தியாலங்கள், பல நாட்கள், பல மாதங்கள், பல வருடங்கள் என காலங்களை சில கருமங்களில் செலவிட்டும், ஒரே நாளில் அதன் பலனை இழக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகிறது. அத்தகைய இழப்பு ஒரு துர்பாக்கிய நிலையென்றே கூறலாம். இந்தச்செயற்பாடு தனிமனித செயற்பாட்டிலும் தேசிய நிலைப்பாட்டிலும் இன்றைய உலகில் நிதர்சனமாக காணக்கூடியதாக இருக்கின்றது என்பதை இந்த சம்பவம் ஆழமாக உணர்த்தியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்ம சாதகனுக்கு நினைத்தது கைகூடும்

ஒரு நாள் காலை நேரம்; சுவாமிஜியின் கட்டளையை ஏற்று ஆச்சிரமம் சென்றிருந்தேன். பக்தர்களுக்கு தரிசனம் அளிக்க விரும்பும் நேரமது. காலைக்கடன் முடிந்து காவித்துண்டை செம்மேனியில் போர்த்திய வண்ணம் சிரித்த முகத்துடன்கட்டிலில் வந்து அமர்ந்தார். சுவாமிஜி முத்துப்பற்களை வெளிக்காட்டிச் சிந்தும் புன்னகைக்கு ஓர் தனி அழகு உண்டு. அவ்வாறே அந்த ஞானியின் உருண்டோடும் விழிகளும், ஜோதி தவழும் முகவிலாசமும் தோற்றமும் அவரது எளிமையை மேலும் அதிகப்படுத்திக் கொண்டிருந்தன.

அஞ்ஞான சிற்பிகளாகிய நாம் அந்த மெய்ஞானியினுடைய வடிவத்தை எப்படித்தான் சொற்களில் வடித்துக்காட்ட முடியும்? அந்தத் திருவுருவை சமீபித்தவுடனே எம்மையே மறந்து விடுகிறோம். சுக துக்கங்கள், பிரச்சினைகள் மூலைக்கு மூலையாக இருந்து இடம் தெரியாமல் ஓடி மறைந்து விடுகின்றன. ஒரே ஆதாரமான அவரின் பேரன்புக்காகவே மனம் கசிந்து வேண்டி நிற்கும்.

அன்றைய தினம் அன்பாகவும், ஆறுதலாகவும், விளையாட்டாகவும் பல உபதேசங்களை பேசிக்கொண்டிருந்தார் சுவாமிஜி. அத்தகைய கணப்பொழுதும் தவப்பொழுதே என்பதை முற்றுமுழுதாக உணர்ந்த நெஞ்சம், அவர் பக்கமே முழுமையாக சார்ந்து நின்றது.

சுவாமிஜியோடு பேசிக்கொண்டிருந்த வேளையில் ஆச்சிரமவாசி ஒருவர் அங்கு வந்தார். சுவாமிஜி நீங்கள் விசாரிக்கும் படி கூறிய உழுவு இயந்திரத்தின் பகுதி ஒன்றின் விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா 570.00 எனத் தெரிவித்தார். பணத்தை கொடுப்பதற்காக பக்கத்தில் மேசை மீது இருந்த கூடையை எடுத்தார்.

இந்தப் பிரபஞ்சத்தின் அடக்கமே அந்தக் கூடைக்குள் என்று தான் கூறவேண்டும். அதற்குள் தேவையான அத்தனையும் அடங்கியிருக்கும். கூடையில் இருந்து மடித்தபடியே கடதாசிப்பை ஒன்றை எடுத்தார். அதனை விரித்த பொழுது அதற்குள் தோலினாலான பணப்பை ஒன்று இருந்தது . சில சமயங்களில் சுவாமிஜியின் பணப்பை சாதாரண கடித உறையாகவும் காட்சி கொடுக்கும். அன்று கூடிய தொகை போலும் தோல் உறையில் பத்திரமாக பணம் காணப்பட்டது.

தோல் உறையை விரித்துக் காண்பித்தார். 2 ரூபா, 10 ரூபா, 50 ரூபா, 100 ரூபா என ரூபாய் நோட்டுக்கள் ஒவ்வொரு பகுதியாக பிரிக்கப்பட்டு சிறிய சிறிய அளவில் ஒழுங்காக அழகாக அடுக்கப்பட்டு இருந்தது. சுவாமிஜினுடைய எந்தக்கருமத்திலும் ஓர் ஒழுங்கும் அழகும் பளிச்சிடும். எந்தப் பொருளும் ஒழுங்காக அழகாக அந்தந்த இடத்தில் வைத்திருப்பார். பக்தர்களுக்கு சிறு கருமங்களில் கூட ஒழுங்கை கடைபிடிக்க வேண்டுமென்பதை மறைமுகமாக புகட்டி விடுவார் அந்த மகான்.

பணப்பையிலிருந்து (purse) 10 ரூபாய் கட்டுக்களில் ஒரு அளவு தொகையை எடுத்து அருகிலிருந்த என்னிடம் தந்து " எண்ணிப் பாருங்கள் " என்று கூறினார். எண்ணி முடிந்ததும் எனக்கு ஆச்சரியம் மேலிட்டது. அதில் சரியாக ஆச்சிரமவாசி கேட்ட 570 ரூபா இருந்தது தான் எனது வியப்புக்கு காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்ம சாதகன் ஒருவனுக்கு எந்த ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அந்தக் கருமம் தப்பாமல் பிறழாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதற்கு ஒரு பிரத்தியட்ச அனுபவமாக இந்த சம்பவம் அமைந்திருந்தது. அது மட்டுமல்ல ஆத்ம சாதகன் ஒருவனுக்கு அவனுடைய கருமங்கள் கூட தானாகவே கைகூடுகின்ற நிலையும் நிச்சயமாக உண்டு என்பதும் அந்த மகானின் கூற்றாகும்.

## இதுவே தொண்டு

1986ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட ஒழுங்கற்ற சூழ்நிலை காரணமாக திருக்கோணமலையின் கஸ்கிசன் வீதியில் அமைந்த ஒரு வழக்கறிஞரின் இல்லத்தின் ஒரு பகுதியில் சுவாமிஜி அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது. ஆச்சிரமம் அமைந்த இடம் பக்தர்கள் வந்து தரிசித்து செல்வதற்கு ஏற்ற சூழ்நிலையாக இல்லாமலிருந்ததே சுவாமிஜியின் இருப்பிட மாற்றத்துக்கு காரணமாக இருந்தது. வழக்கறிஞரின் மனைவியினுடைய கவனத்தோடு கூடிய கண்காணிப்பிலும், அயராத முயற்சியினாலும் அந்த அழகிய இல்லம் அமைதியும், தூய்மையும், காற்றோட்டமும் நிறைந்த சுற்றாடலுடன் ஓர் ஆச்சிரம உணர்வையே, சுவாமிஜி அவர்களைத் தரிசித்து வரும் பக்தர்களுக்கு அளித்தது.

ஒரு காலை நேரம்; சுவாமிஜி அவர்களின் உத்தரவை ஏற்று, சமையலுக்கான சில ஆயத்தங்களை செய்து கொண்டு அந்த இல்லத்திற்கு சென்றிருந்தேன். சமையல் முடிந்து சுவாமிஜி அவர்கள் அந்த இல்லத்தின் முன்னறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே அமர்ந்திருந்தார். சிறிது நேர சம்பாஷணையின் பின் சுவாமிஜி அவர்கள் எழுதிய புத்தகத்துக்கான வாசகங்களை பார்க்கும்படி கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி அவர்களின் வாசகங்களில் சகல விஷயங்களும், கருத்துக்களும் தெள்ளத்தெளிவாக மனதில் ஆழமாக பதியக்கூடிய விதத்தில் அமைந்திருக்கும். அது மட்டுமன்றி மற்றவர்கள் கூறும் கருத்துக்களை மேற்கோள் காட்டி கூறப்படுவதோ, போதிப்பதோ அன்றி சுவாமிஜினுடைய அனுபவத்தை வைத்தே எழுதப்பட்டிருப்பது ஒரு விசேஷம் என்றே கூறலாம்.

அந்த வசனங்களில் ஆழ்ந்திருந்த சமயம், வெளியே கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. அந்த இல்லத்தின் மறுபக்கத்தில் முன் அறையில் வங்கியில் பணிபுரியும் இரு இளைஞர்கள் வாடகைக்கு இருந்தார்கள் . அவர்களில் ஒருவர் வெளியே வந்து என்ன வேண்டும் என்று கேட்டார். வந்தவர்களில் ஒருவர் இரண்டு தினங்களின் பின் வர இருக்கின்ற சித்திரை பௌர்ணமிக்கு கருமாரி அம்மன் கோவில் பொங்கலுக்கு அரிசி , தேங்காய் கேட்டு வந்திருக்கின்றோம் எனக் கூறினார்.

அதற்கு அந்த இளைஞன், எங்களிடத்தில் அவை இல்லை. நாங்கள் இங்கு வாடகைக்கு இருக்கிறோம். தற்சமயம் வீட்டுக்கார அம்மாவும் வெளியூர் சென்றிருக்கிறார் என்று கூறினார். இந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த சுவாமிஜி அவர்கள், உண்ட உடற்களைளையயும் மறந்து சிறிதும் தாமதமின்றி எழுந்து வெளியே சென்று அவர்களை அன்புடன் விசாரித்தார்.

அந் நேரம் சுவாமிஜியைத் தரிசிக்க ஆச்சிரமவாசி ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவரை அழைத்து இவர்களை ஆச்சிரமத்திற்கு கூட்டிச் சென்று மூன்று கொத்து அரிசியும், மூன்று தேங்காயும் எடுத்து கொடுக்கும் படி பணித்து விட்டு, மனநிறைவுடன் திரும்பவும் வந்து நாற்காலியில் அமர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொண்டு,சேவை இப்படியான நற்கருமங்களை நாமாகவே தேடிச்சென்று செய்ய வேண்டுமே தவிர, அவை எங்களை தேடி வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை என்ற போதனை அத் தருணத்தில் சுவாமிஜியின் செயற்பாடாக அமைந்திருந்தது .**

## அச்சம் தவிர்

ஒரு முறை சுவாமிஜி அவர்களுடன் புனித யாத்திரையாக கதிர்காமம் செல்லும் பேறு ஆச்சிரம பக்தர்கள் சிலருக்கு மட்டுமே கிட்டியது. சுவாமிஜி அவர்களுடன் கொழும்புக்கு ரயில் வண்டி மூலம் சென்று சுவாமிஜியின் முன்னேற்பாட்டின் படி கிறீன்லன்ஸ் ஹொட்டலில் தங்கினோம். மறுநாள் காலை அங்கிருந்து பிரத்தியேக வண்டி மூலம் கதிர்காமம் சென்றடைந்தோம். சுவாமிஜியின் பக்தர் ஒருவரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட Circuit Bungalow இல் தங்கி இருக்கும் வசதி எல்லோருக்கும் கிடைத்தது.

மறுநாள் காலை சைதன்யம் பொங்கித் ததும்பும் கதிர்காமக் கந்தனின் ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு தங்குமிடமான பங்களாவை வந்தடைந்தோம். இயற்கை எழிலோடு எதிரே மாணிக்க கங்கையின் ஆற்றோட்டமும், காற்றோட்டமும் நிறைந்த மனோரம்மியமான சூழல்அது. அந்த பங்களாவின் வெளிப்புற விறாந்தையின் சாய்வான கதிரையில் சுவாமிஜி அவர்கள் அமர்ந்திருந்தார்.

சிலர் களைப்பாறிக் கொண்டிருந்தார்கள். சிலர் சமையலுக்கான ஆயத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அந்நேரம் சுவாமிஜி அமர்ந்திருந்த இடத்திற்கு எதிரே கம்பியினால் முள்வேலி போடப்பட்டிருந்தது. இந்த வேலியின் மேல் ஏழெட்டுக் குரங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையாக ஓடிக்கொண்டிருந்தன. உடனே சுவாமிஜி , தனதருகில் கூடையிலிருந்த வாழைப்பழம் ஒன்றை எடுத்து கையில் வைத்துக் கொண்டு ரம்பா...... சம்பா..... எனப் பெயரிட்டு அன்போடு அக் குரங்குகளை அழைத்தார்.

அவரது அன்புக் குரலில் கட்டுண்ட இரு குரங்குகள் சுவாமிஜியை நோக்கி இரண்டடி முன்னே வந்தன. இதனை பார்த்து கொண்டிருந்த சிறுவர்கள் அவற்றின் அருகில் செல்ல முயன்ற பொழுது அவை பின்நோக்கிச் சென்றன. சுவாமிஜி அவர்களை, சற்று விலகி நின்று பார்க்கும்படி பணித்தார். திரும்பவும் அந்தச் செல்லப் பெயர்களால் சுவாமிஜி அழைத்த போது, அவை மெல்ல மெல்ல முன்னே அடி எடுத்து வைத்தன.

ஒன்று, சுவாமிஜியுடன் மிக நெருங்கிய அண்மையிலும் மற்றது சிறிது தூரத்திலும் நின்று கொண்டன. பழத்தை உரித்து அருகில் இருக்கும் உனக்குப் பழம்; தூர இருக்கும் உனக்கு தோல் என்று கூறிய படியே இரண்டு குரங்குகளையும் நோக்கி மெல்ல வீசினார். சிறிய பொழுதாயினும் பெரும் தவப்பயனை அடைந்த அந்த இரண்டு குரங்குகளும் சுவாமிஜியின் திருக்கரத்தால் பெற்றுக்கொண்ட கனியை கையில் எடுத்துக் கொண்டு ஓடின. ஏனைய குரங்குகளுக்கு இப்பேறு கிட்டவில்லை.

**"பயம்" என்றுள்ளது மனிதனுக்கு இருக்கும் வரையில் எந்த ஒரு கருமத்தையும் தொடர்ந்து செயற்படுவது இயலாத காரியம். சாஸ்திரங்கள் கூறும் கூற்றும் இதுவாகும். உற்சாகம், தைரியம், பராக்கிரமம் இவை இல்லாத ஒருவன் வெற்றியை அடைவது கடினம். அவையில்லாதவிடத்து பழமும் தோலும் கிடைத்த கதையாகவே முடியும். இந்த சம்பவத்திலிருந்து பல ஆழமான கருத்துக்கள் நன்கு சிந்தித்தால் தெளிவாக விளங்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே கடந்து போகும்

ஒரு நாள் மதியவேளை; வெய்யில் கொழுத்திக் கொண்டு இருந்தது. சுவாமிஜியின் கட்டளையை ஏற்று ஆச்சிரமம் சென்றிருந்தேன். மதிய உணவு அருந்திவிட்டு தமது கட்டிலில் படுத்திருந்தார். எதிரே சென்று அமர்ந்திருந்தேன். உண்டகளை யாரையும் சிறிது நேரம் களைப்படையச் செய்து விடும். மின்விசிறியைப் போடும் படி கட்டளையிட்டார். சிறிது நேரத்தில் மின்சாரத்தடை ஏற்படவே மின்விசிறி சுழலவில்லை.

சுவாமிஜியின் கட்டிலுக்கு வலதுபுற மூலையில் ஒரு சிறிய அலுமாரி காணப்படும். அதற்கு மேலே அந்த மேசை மின்விசிறி வைக்கப்பட்டு இருந்தது. தன் ஆத்மார்த்தமான பக்தன் பல வருடங்களுக்கு முன் அளித்தது என சுவாமிஜி பெருமையுடன் கூறுவதுண்டு. அதனுடைய சேவை சுவாமிஜிக்கு மகத்தானது. ஏனெனில் சில சமயங்களில் மின்சாரம் தடைப்பட்டு, அந்தச் சிறு அறைக்குள் அவர் புழுங்கித் தவிக்கும் சமயத்தில், மீண்டும் மின்விசிறி சுழல ஆரம்பித்து விட்டால், "என்னுடைய கடவுள் வந்துவிட்டார்" என்று ஹாஸ்யம் பண்ணுவார்.

அன்று மின்சாரம் தடைப்பட்டு இருந்தது. உணவருந்திய நேரம் ஆதலால், அந்த உத்தமமான யோகசித்தரின் மேனியெங்கும் முத்து முத்தாக வியர்வை பனித்துளியாக சிந்திக் கொண்டிருந்தது. தம் செம்மேனியில் போர்த்தப்பட்ட மேற்துண்டினால் உடலைத் துடைத்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மெல்ல மெல்ல வியர்வை அடங்கியது.

மின்விசிறி சுற்றிய சமயம் கிடைத்த சுகம்; நின்றவுடன் ஏற்பட்ட புழுக்கம் - வியர்வை; பின் நேரம் செல்லச் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே அடங்கி சாதாரண நிலைக்கு வந்த நிலைப்பாடு; இந்த சம்பவம் அந்த உத்தமமான நவராத்திரி நன்னாளில் ஒரு பெரும் உபதேசத்தை நிதர்சனமாகக் காட்டியது.

வாழ்க்கையில் பெரிதாக தெரியும் சில பிரச்சனைகள், மனக் கஷ்டங்கள் நம்மை எதிர்நோக்கும் பொழுது அவற்றை ஏற்றுக்கொள்ளவும், எதிர்த்து முகம் கொடுக்கவும் முடியாமல் திணறிப்போய் விடுகிறோம். ஆனால் காலம் செல்ல செல்ல அவை தாமாகவே அடங்கி விடுகின்றன. "இதற்காக அல்லறப்பட்டோமே என அலட்சியமாக கூறும் அளவுக்கு அதன் சுவடே தெரியாமல் மறைந்துவிடுகின்றன." **எல்லாமே கடந்து போகும் என்பது தான் உண்மை.**

**ஆழமாகச் சிந்தித்தால் இந்த உலகில் மிஞ்சுவது இரண்டே இரண்டு விஷயங்கள் தான். ஒன்று; நாம் காணும் இப்பௌதீக உலகம். மற்றது; உலகிலுள்ள உயிர்களும், செடி கொடி – சூரியன் சந்திரன் – காடு மலைகள் இவையாகும்.இப் புறச்சூழ் நிலைகளே துயரம் நிறைந்த நிகழ்ச்சிகளால் சலனங்கள், மனத்தாக்கங்களை தோற்றுவிக்கின்றன.**

**எமது வாழ்க்கையில் இரண்டு விஷயங்களை நாம் விளங்கி கொள்ள முடியாதவராய் இருக்கிறோம். ஒன்று கர்மதோஷம் பற்றியது. மற்றையது ஆத்ம அனுபவங்கள். அன்றைய சம்பவம் என் மன எண்ணங்களை விசாலப்படுத்தும் ஒரு நிகழ்வாகவே அமைந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்புக்கும் இரங்கிடும் இதயம்

ஒரு சமயம் காலைப் பொழுது; குருஜியை தரிசிக்கும் வாய்ப்பை பெற்றதால் ஆச்சிரமம் சென்றிருந்தேன். உணவு முறைகள், மற்றும் ஆச்சிரம கருமாங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தார். இடையிடையே அருகில் மேசையிலிருந்த விசிறியை எடுத்து விசிறிக்கொண்டிருந்தார். மின்சாரம் தடைப்பட்டு இருந்தது. ஒரு பக்கம் நுளம்பின் உபத்திரவம்; மறுபக்கம் எறும்பின் உபத்திரவம். இந்த உபத்திரவங்களுக்கிடையே ஹாஸ்யம் வேறு. எத்தனையோ பக்தர்களுடைய பிரச்சினைகளை, கஷ்டங்களை ஏற்றுக் கொண்டு எவ்வளவோ கருமங்களை கவனிக்க வேண்டியும், கவனித்து கொண்டும் இருக்கும் நிலையிலும், சந்தோஷமாக பேசி எங்களையும் மகிழ வைப்பார் குருஜி.

"நான் நான்கு நாட்களாக கோதுமைக் கஞ்சி தான் அருந்திக் கொண்டிருக்கிறேன். உடம்பில் இரத்தம் இருப்பதால் தானே நுளம்பு வந்து குத்திக் கொண்டிருக்கிறது. சாப்பிடாமலே விட்டுவிட்டால் அவர்கள் வேறு இடம் பார்த்துக் கொள்வார்கள்." இதே போன்று தன் பேச்சினிடையே காலமெல்லாம் நினைந்து நினைந்து சிரித்து மகிழக் கூடியதான நகைச்சுவை பேச்சுக்களை நாம் குருஜியிடம் கேட்கலாம்.

எறும்பு என்று அந்நேரம் குறிப்பிட்டதும், அதற்குக்கூட வேண்டிய வசதி செய்து கொடுத்திருப்பதை கருத்திற்கு கொண்டு வந்தார். சுவாமிஜியின் கட்டிலின் எதிர்மூலையில் ஓர் சிறிய அலுமாரி வைக்கப்பட்டு இருந்தது. சுவாமிஜி எழுந்து சென்று அதனை திறந்து காண்பித்தார். போத்தல்கள், உணவுப்பொருட்கள் முதல் மருந்து மற்றும் தேவையான பொருட்கள் யாவும் அழகாக ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்தட்டின் ஒரு பக்கத்தில் காய்ந்த பாண் துண்டொன்று போடப்பட்டு இருந்தது. எறும்புகள் அதனை அரித்தரித்து தூளாக்கிக் கொண்டு இருந்தன. இந்த விசித்திர செயலைப் பார்த்து நின்ற வேளையில் பின்புற அறையிலிருந்து சுவாமிஜி அழைத்ததை கேட்டுச் சென்றேன். அந்த அறையில் ஒரு நீளப்பெட்டகம் காணப்பட்டது. அதில் உணவுப்பொருட்கள், போத்தல்கள் சிறிய தகரடப்பாக்கள் அடுக்கப்பட்டு இருந்தன. பெட்டகத்தின் ஒரு பக்கத்தில் ஒரு பிளாஸ்டிக் மூடியில் நன்கு தூளாக அரிக்கப்பட்ட பாதாம் பருப்பும், முழுமையான பாதாம் பருப்பும் காணப்பட்டன. எறும்புக்கு முதற்கொண்டு கவனமாக உணவு வைக்கப்பட்டு இருந்தது. எல்லாப் பொருட்களையும் வைத்து பரீட்சித்ததில், இந்த இரண்டு பொருட்களிலும் அவை மிகுந்த விருப்பம் கொண்டிருப்பதை தெரிந்து வைத்துள்ளார் சுவாமிஜி.

ஓர் மூடியில் பாதாம் பருப்பும், கடதாசியில் பாணும் பக்குவமாக வைக்கப்பட்டிருந்த காட்சி எல்லா ஜீவராசிகளிடத்தும் அவர் காட்டும் சம பாவனையின் சிறப்பையே எனக்குணர்த்தியது. "இந்தச் சின்னஞ் சிறு எறும்பு கூட்டத்தைப் பார்க்கும் போதெல்லாம் மனதில் உற்சாகம், மகிழ்வு, பிரியம் தான் ஏற்படுகிறது. ஏன் தெரியுமா? அதன் விடாமுயற்சியும், ஊக்கமும், சுறுசுறுப்பும் தான் காரணம். அத்துடன் அதற்கு விருப்பமான பொருளை வைத்தால், அந்தப் பொருளுடனேயே நின்று கொள்ளும். மற்றப் பொருட்களுக்குச் செல்லாது." என ஆழமான கருத்தையும் கூறினார்.

**இந்த பகுத்தறிவற்ற ஜீவராசிகளைக் கூட திருத்தி விடலாம். மனிதன் அவற்றை விட ஓரறிவு கூடுதலாக இருப்பதாற் போலும், திருத்த முடியாமல் அல்லல் படுகிறான். இந்தத் தத்துவத்தை அச்சிறு பொழுது உணர்த்திய பொழுது, மனித வர்க்கமே இதைப் பார்த்து தலைகுனிய வேண்டி இருப்பதை மறுப்பதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகத்தின் வடிவம் குரு

சூரியன் நடுமையத்திற்கு வரும் வேளை; சரியாக 11.30மணி; சுவாமிஜியின் அழைப்பில் மனம் குதூகலித்து ஆச்சிரமத்திற்கு சென்றேன். மண்டபத்தை கடந்து சுவாமிஜியின் சிறிய அறையை அடைந்தேன். அங்கு சுவாமிஜி இருக்கவில்லை. அடுத்துள்ள சமயலறையை சற்று எட்டிப்பார்த்தேன். வேலை செய்து களைத்து சோர்ந்த அந்த நேரத்திலும் "வாங்கோ" என்று நிறைந்த முக மலர்ச்சியுடன் எனது பெயரை அன்புடன் கூறிய படியே சுவாமிஜி அழைத்தார். ஒரு விநாடி என்னுள் மகிழ்ச்சி பிரவாகம் மின்னலாக ஓடி மறைந்தது.

தன் உடல் கஷ்டத்திலும் கூட மற்றுள்ளோரை இன்முகத்துடன் உபசரிப்பார் சுவாமிஜி. அந்த உத்தமர் சோர்ந்து விட்டால் பல பக்தி உள்ளங்களும் சோர்ந்து விடுமோ என்ற துடிப்பில் கலகலப்பாக காட்சி கொடுப்பார் நம் குரு. கதவின் ஓரம் நின்று கொண்டு அந்த அறையை பார்க்கிறேன். அது சமையலறைதானா என்பதை அங்குள்ள பொருட்களை கொண்டு தான் கணிக்க முடிகிறதே தவிர, சமைத்த சுவடே அங்கு தெரியவில்லை.

பாத்திரங்கள் அப்புனித கரங்களால் கழுவித் துடைக்கப்பட்டு அந்தந்த இடங்களில் அடுக்கப்பட்டு அவ்விடம் தூய்மையோடு துலங்கியது. சுவாமிஜி உணவருந்தும் மேசையில் பாத்திரங்களில் சாதம், கறிவகைகள் எடுத்து வைத்து மூடப்பட்டு உணவருந்த இலையும் கழுவி மடித்த நிலையில் தயாராக இருந்தது. Gas அடுப்பில் எண்ணெய் ஊற்றப்பட்ட தாச்சியும், அருகே கடதாசியில் பப்படமும் உணவருந்தும் சமயம் பொரித்தெடுக்க வைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்படப் பிரியரான நம் குரு, சாதத்துடனும், பிட்டுடனும் பப்படத்தை சேர்த்துக் கொள்வதில் தவறுவதில்லை. "பப்படப் பிரியாய நம" என தம்மை அர்ச்சிக்கும் படி ஹாஸ்யமாக கூறுவார். இவற்றை எல்லாம் பார்த்து நான் அதிசயித்து நின்ற சமயம், மேலே வரும்படி சுவாமிஜியின் அழைப்பைக் கேட்டு இவ்வுலகுக்கு மீண்டேன். சமையலறைக்கு மேல் அமைந்த மேல் தளத்தை நோக்கிப் படி ஏறி சுவாமிஜியிடம் சென்றேன்.

மாடிப்படிகளின் முடிவில் சுவாமிஜியின் புனித அறை மேலே வருகிறது. சுவாமிஜி அங்கிருந்த மடிப்புக் கட்டிலில் சிறிது களைப்பாக அமர எதிரே நானும் அமர்கிறேன். மிகவும் களைத்து கண்கள் சோர்ந்து காணப்பட்டதை பார்த்த பொழுது மனம் வேதனையடைந்தது. வழமையாக சுவாமிஜி காலையில் எழுந்து நடைபெற்ற சம்பவங்களை கூறுவது வழக்கம். இன்று சமையலின் பக்கம் பேச்சு திரும்பிய பொழுது சிறிது ஆச்சரியப்பட்டேன்.

நாலைந்து தினங்களாக கடும் உடல் நலக்குறைவினால் சுவாமிஜி பாதிக்கபட்டு இருந்தும் தன் உடலுக்கு கடுகளவும் ஒவ்வாத எதிர்மாறான உணவு சமைக்கப்பட்டு இருந்ததை கேட்டதே எனது ஆச்சரியத்துக்கான காரணம். காரணத்தை சுவாமிஜி விளக்கிய பொழுது, ஆச்சரியத்துக்கு மேலாக எனது உள்ளம் நெகிழ்ந்தது. தம்மில் மேலான அன்பு செலுத்தும் நெருக்கமான பக்தன், ஏதோ சில காரணங்களால் மன விரக்தியுற்று இருந்த நிலையில், அவரை வெளியில் விட்டு அதனால் வரக்கூடிய விபரீத விளைவுகளை ஏற்க சுவாமிஜியின் கருணையான உள்ளம் இடம் அளிக்கவில்லை.

அவரை தன்னுடைய ஆச்சிரமத்தில் தங்கவைத்து அரவணைத்து ஆறுதல் அளிப்பதில் மட்டும் நின்று விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய உடல்நிலைக்கேற்ற உணவு நியமங்களை கூட விட்டுக்கொடுத்து, தனது உடலுக்கு ஒவ்வாத உணவையே சமைத்து, நாலைந்து நாட்களாக உண்பதாக கேட்ட பொழுது, அந்த உத்தமரின் தியாக குணத்தையிட்டு மனம் கசிந்து சிந்தித்தேன்.

## மேலை நாட்டுப் பக்தன்

ஆச்சிரம மண்டபம் எம் குருதேவரின் சைதன்ய சக்தியையும், பல வருடகால பிராத்தனையின் சக்தி வாய்ந்த அலைகளையும் தன்னுள் நிரப்பி எப்பொழுதும் அமைதியாக காட்சியளிக்கும். அந்தப் புனித மண்டபத்தில் காலடி வைத்ததுமே தம் மனச்சுமை கணப்பொழுதில் நீங்கி அமைதி நிறைந்த மனோபாவத்தை தம் சொந்த அனுபவத்தில் பெற்ற பலர் இருக்கின்றார்கள்.

"Contentment is natural wealth", "you are born for higher things", "ஜெபம் இஷ்ட சித்தி தரும்" "தியானம் மனப்பிணி அகற்றும்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று பொறிக்கப்பட்ட ஆழமான பொருள் பொதிந்த வாக்கியங்களும், குண்டலினி வடிவத்தின் மூலம் ஜீவன் முக்தியை காட்டும் சின்னமும், இங்கு வருபவருக்கு உயர்ந்த உபதேசங்களாக இம் மண்டபத்தில் எப்பொழுதும் துலங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தப் புனித மண்டபத்தில் ஜேர்மன் நாட்டு இளைஞன் ஒருவரை சில காலம் காணக்கூடியதாக இருந்தது. மேல் நாட்டவர்களுக்கே உரித்தான சிவந்த உயர்ந்த தோற்றம்; அங்கும் இங்கும் அலைந்த படி விடுதலையை அடையத் துடிக்கும் சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள்; உயர்ந்த இலட்சியத்தை பதித்து காட்டும் முகம். கோடான கோடி மேல்நாட்டு இளைஞர்களில் அவருடைய பிராரப்த புண்ணியம் இந்த புனித சந்நிதியில் இடமளித்து இருக்கிறது. பூர்வ வாசனையின் பலம் தான் எத்தனை இறுக்கமானது.

ஓர் உத்தமமான தாயின் அன்பிலும் கண்டிப்பிலும் வளரும் குழந்தையை போன்று, சுவாமிஜியை தன் குருவாக பெற்றிருக்கும் புண்ணிய ஜீவன் இந்த இளைஞன். எந்த நேரத்தில் இந்த இளைஞனை சந்தித்தாலும் ஏதோ ஒரு கருமத்தில் ஈடுபட்டிருப்பதை காணலாம். அதிகாலை யோகாசனம் தியானம்; மதியம் மாலை ஜெபதியானம் என்று ஆழ்ந்து விடுவார். இடை நேரங்களில் அவர் எந்த சமூகத்துடன் சேர்ந்து வாழ்கின்றாரோ அந்த சமூகத்தின் மொழியை–தமிழை பயிலும் ஆர்வம்.

சாதாரண வேஷ்டி சட்டை அணிந்து, இந்துப் பண்பாட்டுடன் காணப்படும் இந்த இளைஞன், சுத்தமான சாத்வீக சைவ உணவை மன நிறைவுடன் ஏற்று உண்கிறார். இலங்கையில் இருக்கக்கூடிய காலவரை முடிந்து தன் நாடு திரும்ப வேண்டிய கட்டாய நிலை இடையிடையே ஏற்பட்டு விடும். தன் வணக்கத்துக்குரிய குருவை அமைதியான சூழலை மன விருப்பமின்றி விட்டுச் சென்றாலும், சைவ உணவையே தன் நாட்டிலும் மேற்கொண்டது அவருடைய மன வலிமையும் ஸ்திரமான குறிக்கோளையும் வலியுறுத்திக் காட்டுகிறது.

இயந்திர கதியில் ஓடிச்செல்லும் தனது நாட்டு வாழ்க்கையில் விருப்பமின்றி அமைதியும் ஆனந்தமுமான வாழ்க்கையை ஆச்சிரமத்தில் மேற்கொண்டார். கால நேரம் தவறாமல் தன் கடமைகளை செய்து வரும் இந்த இளைஞன் காலத்தை வீணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிப்பதில்லை. வெளிவிவகாரங்களில் தன் புலன்களை செலவிடாது, சுவாமிஜியின் இணக்கத்தை ஒவ்வொரு கணமும் தவப்பொழுதாக காத்திருந்து பெற்று, பேரானந்தம் அடைகிறார்.

இதற்காக தன் அருமை பெற்றோரின் அன்பையும், தன் ஒரே உடன் பிறப்பான அன்புச் சகோதரியின் பாசத்தையும் கூட உதறி விட்டு, சுவாமிஜியின் பாதங்களின் கீழ் நிரந்தரமாக இருந்துவிட திடசித்தமாக இருக்கிறார்.

இத்தனைக்கும் இந்த இளைஞனின் தாயகம் நாகரீகத்திலும் ஆடம்பரத்திலும் இயந்திர கதியில் முன்னேறிச் செல்லும் சூழலைக் கொண்ட ஜேர்மன் தேசமாகும். அந்த மேல்நாட்டு இளைஞனின் தோற்றம் உடை, உணவு–செயற்பாடுகளின்–ஒழுங்கு–குறிக்கோள் இவை அங்கு வருவோரின் கவனத்திற்கு எடுத்துக் கற்றுக்கொள்ள வேண்டிய பல பாடங்களை புகட்டி நிற்பதை மறுப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணைத் தெய்வம்

திருகோணமலையிலிருந்து பத்து மைல் தொலைவில் பன்மத வாச்சி என்னும் இடம் இருக்கிறது. அங்குதான் சுவாமிஜி அவர்களுடைய சரீர வியர்வை சிந்தி, காடு திருத்தி, களனிகளாக்கப்பட்டு நெற்செய்கை பண்ணப்படுகிறது. அந்தச் சுற்றுவட்டாரத்தில் எம் குருவை நம்பி பல தொழிலாள பக்தர்களின் குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

ஒரு சமயம் அறுவடைக்கென ஒரு கிழமை வயலில் தங்கி ஆச்சிரமம் திரும்பிய சமயம், எத்தனையோ பக்தர்களின் பல ஜென்மங்களாகத் தொடரும் கர்மச் சுமைகளை ஏற்றுச் சுகமளிக்கும் அவரின் திருப்பாதங்களுடன் இணைந்து நிற்கும் தளிர் விரல்கள் பத்திலும் கொப்புளங்கள் தோன்றி இருந்தன. இரண்டொரு நாளில் அவை பெரிதாகி கடும் உபாதையை கொடுக்கத் தொடங்கின.

கடுமையான காய்ச்சல் ஒரு புறம்; குளிரிலும் பனியிலும் போர்வை படாத அத்திருமேனி போர்வைக்குள் சுருண்டு கிடந்தது. கொப்புளங்களினின்றும் நீர் வடியத்தொடங்கியது. சுவாமிஜியின் ஆத்மார்த்த பக்தர்கள் உடன் நின்று அவருடைய ஆகாரத்தையும் சிகிச்சையையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். கொப்புளங்களின் தோல் உரிந்து அந்தப் பாத கமலங்கள் செக்கச்செவேலென செம்மலர்களாகக் காணப்பட்டன.

நோய் அதிகரிக்கவே சிகிச்சைக்கென யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலைக்குச் செல்ல ஏற்பாடாகி இருந்தது. எட்டு நாட்களின் பின்னரே சிகிச்சைக்குச் செல்ல சுவாமிஜி நாட்குறித்தார். ஏனெனில் தொடங்கிய கருமத்தை நிறைவேற்றாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூரணப்படுத்தாமல் செல்வதற்கு அந்த உத்தம துறவியின் மனம் ஒப்பவில்லை. வயல் சூடடிப்பு ஒரு புறம்; ஆச்சிரம கட்டட வேலைகள் அரைகுறையாக மறுபுறம்; சூடடிப்பை முடித்து தன்னையே கதி என நம்பி வாழும் தொழிலாளர்களின் கருமங்களை முடிக்கும் முயற்சி வேறு.

செல்வதற்கு முன்தினம் சுவாமிஜியின் அழைப்பைப் பெற்று சுவாமிஜியை தரிசிக்கும் ஆவலுடன் ஆச்சிரமம் சென்றேன். மரக்கட்டிலில் அத்திருவுருவம் சுருண்டு படுத்திருந்த காட்சி முதலில் மனதை வேதனைபடுத்தியது. அடுத்து என் கண்கள் சுவாமிஜியின் பாதாரவிந்தங்களை நோக்கிச் சென்றன. சுற்றாடலை மறந்து மனதை கசிக்கிப்பிழிந்து அடக்க முடியாமல் கண்கள் நீரைச் சொரிந்தன. பாதத்தின் விரல் நுனிகளிலும் அடிப்பாதத்திலும் மாமிசப்பிண்டம் போன்று தோலும் கொப்புளங்களும் காணப்பட்டமை மிகுந்த வேதனையை உண்டு பண்ணியது.

அத்தகைய மிகக் கடுமையான உபாதையிலும் கூட, அங்கு நடந்த கொண்டிருந்த செயல்களும் சுவாமிஜியிடம் இருந்து வெளிவந்த மணியான சொற்களும், அர்த்த புஷ்டியான உபதேசங்களாகவே மலர்ந்து நின்றன. இந்தக் கடும் உபாதையில் சரியான உணவுக்கிரமமின்றி ஒரு சாதாரண மனிதன், இந்த உலகத்தையே மறந்து விடுவான். கோபம் ஒன்றுதான் மிஞ்சி நிற்கும். தனது உடல் உபாதையை விட வேறெதிலும் கவனம் செல்லாது.

வயலில் தொழிலாள பக்தர்கள் சுவாமிஜியின் மேற்பார்வை இல்லாமலே தம் குருவை இந்நிலையில் இருந்து சிகிச்சைக்கு அனுப்ப எண்ணி வயல் அறுவடையை இரவு பகலாக பூரணப்படுத்தி கருமமாற்றினார்கள். இரண்டு தினங்களுக்கு முன் பக்தர் ஒருவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்ட மயில் குஞ்சுகளையும் சுவாமிஜி ஏற்றிருந்தார். கரும வினைகளைத் தீர்த்துகொள்வதற்காக வரும் விலங்கினங்களை ஏற்பதற்கு அவர் ஒரு போதும் மறுப்பதில்லை. அந்த மயில் குஞ்சுகளுக்குக் கூட இரவோடு இரவாக பெரிய அளவில் கூடடித்து. அவற்றிற்கு வசதியாக புகலிடம் அளித்த செயல் மேனியை சிலிர்க்க வைத்தது.

உயிரினம் எதுவாக இருந்தாலும் அதற்குரிய பாதுகாப்பும் வசதியும் கவனிப்பும் சுதந்திரமும் தந்து அணைப்பதற்கு எம் குருஜி எப்போதும் காத்திருப்பார். தன் நலத்தை விட வயல் ஆச்சிரமம் போன்ற தன் கடமைகளில் பண்போடு ஒழுகும் ஓர் உத்தம புருஷரைத்தான் அங்கு காணமுடிந்தது. கடமை முடித்து மயிற்குஞ்சுகளுக்கும் பாதுகாப்பளித்து அவற்றையும் அன்பாக பார்த்துவிட்டு மலர்ந்த முகத்துடன் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் புறப்பட்ட சமயம் அவ்விடம் சென்றேன்.

அம் மகானின் திருக்கரங்கள் கடும் உபாதையிலும் கூட கைகூப்பி விடை தந்தது. அவ் அற்புத திருவுருவை கண்டு உள்ளம் உருகி நினறு என் இருகரங்களையும் கூப்பி வணங்கினேன். தன்னை நம்பி வந்த பக்தர்கள் இறுகப்பற்றியதால் அவர்கள் துன்பங்களையெல்லாம் தனதாக எற்றுக்கொண்ட திருப்பாதங்கள் அல்லவா அவை. தயை, தாட்சண்ணியம், கருணை இல்லாமல் ஒரு கருங்கல்லாக இருப்பதில் அர்த்தமில்லை என்பதில் உறுதியான அந்த தியாக புருஷர் தன் திருப்பாதங்களில் ஏற்பட்ட வருத்தத்தைப் பெரிதாக எடுக்கவில்லை. வருகிற நேரத்தில் வந்து, போகிற நேரத்தில் போகும் என்று எமக்கே ஆறுதல் அளித்து நின்றார். அதே வேளை அதை உதாசீனப்படுத்தாமல் அதற்குரிய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். என்ற பாடத்தையும் புகட்டிய படியே பயணத்திற்கு ஆய்த்தமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமம் கண்ட அற்புதம்

வணக்கத்திற்குரிய சுவாமிஜி அவர்கள் சைதன்யம் நிரம்பி வழியும் புனித ஆலயமான கதிர்காமத்திற்கு பலவருட காலமாக பலதடவைகள் சென்று வந்திருக்கின்றார். வாகனங்களில் மட்டுமின்றி பாதயாத்திரையாகவும் ஆச்சிரம பக்தர்களுடன் அந்த அருள்மிகு ஆலயத்திற்கு சென்று திரும்பியிருக்கின்றார். ஒரு சமயம் சுவாமி ஜெகதீஸ்வரனந்தா அவர்களும் குருஜியுடன் கூடவே செல்லும் பாக்கியத்தை பெற்றிருக்கிறார். இத்தகைய பேற்றை பெற்ற பக்தர்கள் யாவரும் புண்ணியம் செய்தவர்களே.

ஒரு சமயம் ஆச்சிரம அன்பர்களுக்கு கிடைத்த தவப்பயனால் சுவாமிஜி அவர்கள் ஓர் புனித ஸ்தல யாத்திரையை மேற்கொள்ள திருவுளம் கொண்டார். ஐம்பதிற்கு மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொள்வதற்கு ஏற்பாடாகி இருந்தது. ஆச்சிரமத்திலிருந்து புறப்பட்ட பிரயாணம் மட்டக்களப்பு வழியாக கதிர்காமத்தை அடைந்தது. சென்ற வழியெங்கும் ஆலயங்களில் சுவாமிஜியையும் பக்தர்களையும் உபசரித்து உணவளித்தனர். சுவாமிஜியின் பக்தனால் ஒழுங்கு செய்யப்பட்ட Cricuit Bungolow வில் எல்லோரும் தங்கினோம்.

மறு நாள் அதிகாலை புதிய கங்கையிலே நீராடி பக்தியுணர்வுடன் பஜனைப் பாடல்களை பாடியபடியே கதிர்காம கந்தனுடைய ஆலயத்தைச் சென்றடைந்தோம். வாகனம் நிறுத்தப்பட வேண்டிய இடத்திலிருந்து சுவாமிஜியுடன் ஆலயத்தை நோக்கி எல்லோரும் நடந்து சென்று கொண்டு இருந்தோம். ஆலயவாசலுக்கு சிறிது தூரத்தில் இலக்ஷணமானதொரு யானை, பாகனுடன் ஆடி அசைந்து கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்தது. சுவாமிஜிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் வந்ததும் தன் கம்பீரமான நடையை சிறிது தளர்த்தி நிறுத்தி சுவாமிஜியின் பக்கம் திரும்பி அவரை பார்த்தபடியே நின்றது. இந்தச் செயற்பாடு எம் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

பொதுவாக யானைகளைப்பற்றி பேசுவதென்றாலே எம் குருஜியின் உற்சாகம் கரைபுரண்டு ஓடும். உள்ளக்களிப்போடு அதன் உயர்ந்த குணாதிசயங்களைப் பற்றிக் கூறுவார். காட்டில் அவை மக்களால் துன்புறுத்தபடுவதை கண்டிப்பார். பூர்வீகவாசனை போலும் மூன்று யானைகளை கட்டி ஆண்ட நம்பூதிரி குடும்ப பிண்ணனியை கொண்டவரல்லவா நம் குருஜி. யானைகளைப் பார்த்து மகிழ்வது அவைபற்றி பேசுவது என்பவற்றிலிருந்து, அவர் உள்ளத்தில் யானைகள் எத்தகைய உயர்ந்த இடத்தை பெற்றிருக்கிறது என்பதை உணரலாம். குருஜியால் நிர்மாணிக்கப்பட்ட நடேசர் ஆலயத்தில் கூட ஒரு யானையை விலைக்கு வாங்கி வளர்க்க முயற்சி செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமிஜியின் எதிரே நின்ற யானைக்கு தன் திருகரங்களால் பழமும், பணமும் கொடுத்து அனுப்பிய பின் ஆலய உட்பிரகார வாயிலைச் சென்றடைந்தோம். சுவாமிஜி பணித்ததன் படி ஆரம்பத்தில் ஆண்களின் அங்கப்பிரதட்சனை முன்னும் – கற்பூரச்சட்டி ஏந்திய பெண்கள் கூட்டம் அடுத்தும் – முருகன் திருநாம பஜனையை பரவசத்துடன் பஜனை செய்தவர் பின்னுமாக சுவாமிஜியின் தலைமையில் ஆலயத்தை வலம்வர ஆரம்பித்தோம்.

அக் காட்சியின் ஆரம்பத்தை மட்டும்தாம் நாம் அறிந்தோம். ஆலயத்தைச் சுற்றிவரும் வரை நாம் நாமாக இருக்கவில்லை. விழிநீர் அருவியாகப் பெருகி ஓடியபடியே இருந்தது. மேனியெங்கும் ஓர்பரிசுத்தமானஉணர்வின் தீண்டுதலினால் ஆக்கிரமிக்கபட்டவரானோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை எம்மிடத்திலிருந்து எழுந்த உணர்வலைகளை வார்த்தைகளில் வடிப்பதென்பது சாத்தியமற்ற விஷயம். இத்தகைய உயர்ந்ததோர் சுக அனுபவத்தைத் தந்த அன்புத்தெய்வத்தின் திருப்பாதங்களை இறுகப்பற்றி கதற வேண்டும் என்ற உணர்வுதான் மேலிட்டது.

சிறிது நேரம் கழித்து பழைய நிலைக்கு நாங்கள் வந்து கொண்டு இருந்த பொழுது, ஆலயம் முழுவதையும் சுற்றி நின்ற பெருந்திரளான மக்கள் கூட்டம் இந்த அற்புத நிகழ்ச்சியை ஆடாது அசையாது மெய்மறந்து அரைமணி நேரமாக பார்த்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. சுவாமிஜியுடன் சென்ற அத்தனை பக்தர்களுக்கும் அங்கு ஒரே சமயத்தில் ஏற்பட்ட பேரனுபவம் எவ்வாறு கிடைத்ததென்பதை சுவாமிஜி அவர்கள் பிரத்தியட்ஷமாக உணர வைத்தார்.

**காரணங்கள் நமக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம். இருந்தும் "சங்கே சக்தி கலியுக" என்பது போல் கலியுகத்தில் ஒரு கூட்டு முயற்சியால் எல்லோருடைய உள்ளத்தினின்றும் ஒரே நேரத்தில் எழுந்த தூய உணர்வலைகளின் மன ஒருமைபாடுதான் இத்தகைய ஓர் அற்புத உணர்வையும் அனுபவத்தையும் கொடுத்தது. எந்தவொரு கருமத்திலும் ஏகோபித்த மனத்துடன் முழுமையாக ஈடுபடுவோமானால், நிச்சயமாக அதில் பூரண வெற்றியையும் நிறைந்த பலனையும் சுகத்தையும் இந்த மனித வர்க்கம் அடைய முடியும் என்பதை இந்த சம்பவம் நிரூபித்த வகை இன்று நினைத்தாலும் மெய் சிலிர்க்க வைக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடிடும் மனிதா! நீ தேடுவது என்ன?

ஒரு சமயம் காலை 8.30 மணி இருக்கும்; சுவாமிஜி அழைத்ததால் ஆச்சிரமத்திற்கு செல்வதற்காக வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன். எங்கள் இல்லத்திற்கும் தெருவின் எதிர்ச்சாரியில் அமைந்த ஆச்சிரமத்திற்கும் உள்ள இடைத்தூரம் சுமார் 50 யார் இருக்கலாம். பல பிறவிகளின் வழிவந்த பயன்களில் இதுவும் ஒன்று. வீட்டினின்றும் தெருவை கடந்து செல்வதற்கு போக்குவரத்துத் தடை சிறிது ஏற்பட்டது.

காலை நேரம் ஆதலால் வீதியில் ஒரே பரப்பரப்பு - எவரிடத்திலும் ஓர் அவசரம் - பாடசாலை செல்லும் பிள்ளைகள், உத்தியோகம் பார்க்கும் ஆண்கள், பெண்கள், வியாபாரிகள், பல்வேறு தரப்பட்ட மனிதர்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், மோட்டார்கள் என போக்குவரத்து மிக நெரிசலாக காணப்பட்டது. அவரவர் தங்கள் கருமமே கண்ணாக, வாகனங்களும் மனிதர்களும் போட்டி போட்டபடி வீதிகளுக்குக் கட்டுபட்டு ஓடிக்கொண்டிருந்தனர்.

வீட்டு வாசலில் சில நிமிடங்கள் நின்று பார்த்துவிட்டு குறுக்காக சென்று ஆச்சிரமத்தை அடைந்தேன். மண்டப வாயிலில் சுவாமிஜி அவர்கள் நின்று வெளியே பார்த்து கொண்டிருந்ததை அவதானித்தேன். அக்காலை நேர தெருக்காட்சியை சுவாமிஜி எடுத்துக்காட்டி என்னை சிந்திக்க வைத்தார்.

**இந்த மனிதப் பிறவியை பெற்ற மக்கள் எங்கெங்கோ ஓடி அலைகிறார்கள். இந்த உலகத்தில் பிறக்கும் பொழுது ஒவ்வொருவரும் எதை சொத்தாக கொண்டு வருகிறார்களோ -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ் உலகை விட்டு போகும் போது திரும்பவும் எதை எடுத்து கொண்டு போகிறார்களோ - அவற்றுடன் அவர்களின் அடுத்த பயணம் தொடர்கிறது.**

விடிந்தால் பொழுதடையும் வரை ஓடி ஓடி அலைகிறார்கள். நடந்தும் – இருந்தும் – கிடந்தும் தத்தம் வசதிப்படி அங்குமிங்குமாக ஓடுகிறார்கள். எங்குதான் இம் மனிதர்கள் ஆலா போன்று பறக்கிறார்கள்? ஏன் இப்படி அலைகிறார்கள்.... இது எங்கு சென்று முடியப்போகிறது?.... இறைவனுடைய பாதமே துணை என்று இந்த மனித வாழ்க்கையை துச்சமாக அற்பமாக உதறி எறிந்து, எல்லாவற்றையும் துறந்து விட்டு நித்தியமானதுடன் தம்மை ஐக்கியமாவதற்கு என அற்புதப் பிறவியை எடுத்தவர்களுக்குத்தான் நிரந்தர விடுதலை சுதந்திரம் உண்டு. மற்றவர்களுக்கு மானிட வாழ்க்கையில் அவரவர்களுக்கு இடப்பட்ட கடமைகளை அனுசரித்து, உத்தம கிரகஸ்தர்களாக வாழ்ந்தாக வேண்டிய பாரிய பொறுப்பு தவிர்க்க முடியாதபடி ஏற்படுகிறது.

**அவரவர் கர்ம வினைகளின் பலாபலன்களுக்கு ஏற்றபடியே ஒவ்வொன்றும் அமைகிறது. ஒவ்வொரு மனிதனும் தான் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற அபிலாஷையினால் தான் ஓடி ஓடி அலைகிறான். ஒவ்வொருவரிடத்தும் உள்ள தவிர்க்க முடியாத சுதந்திர தாகம் தான் அவனது ஓட்டத்திற்கான காரணம் என்ற உயர்ந்த போதம் தான் அந்த தெருக்காட்சியில் பிரதிபலித்தது. இத்தகையதோர் அருமையான உலக தத்துவத்தை உணர்த்திய எளிமை பொருந்திய எம் குருவை எண்ணி பெருமையால் மனம் நெகிழ்ந்தேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சமாஜ வெளியீடுகள்

- ☆ அலையாத இன்பம்
- ☆ கீதா சாரம்
- ☆ ஆத்ம விஜாரம்
- ☆ மெய்யுணர்வு
- ☆ ஞான மண்டலம்
- ☆ வஜனாமிர்தம்
- ☆ ஆலயம்
- ☆ மணிமொழிகள்
- ☆ சரஸ்வதி பூஜை
- ☆ வேத நூல்
- ☆ **My Guru**
- ☆ **Nectarious Sentences**
- ☆ ஞானச்சுடர்
- ☆ குரு முகம்
- ☆ பிரம்மஞானி ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா
- ☆ அமிர்தவர்ஷம்
- ☆ அமிர்தத் துளிகள்
- ☆ சித்த சோதனை
- ☆ அமிர்த புத்திரன் ஸ்ரீமத் சுவாமி ஜெகதீஸ்வரானந்தா
- ☆ குருமணியின் பாதங்களில் – பாகம் I
- ☆ குருமணியின் பாதங்களில் – பாகம் II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org